வாராந்த சஞ்சிகை

# சுடர் ஒளி

பெப்ரவரி 03 - 09, 2016

பக்கம் 24

விலை 30/-




# உச்சந்தலையடி வாங்கிய மஞ்சள் காடைத்தனம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்த புகைப்படத்தில் அப்படி என்ன அதிசயம்?


கறுப்பு நிறப் பின்புலத்தில் மிக சாதாரணமாக எடுக்கப்பட்ட ஒரு உருளைக்கிழங்கின் புகைப்படம் 7.38 கோடி இந்திய ரூபாய்க்கு விலை போகியிருக்கிறது என்பதை சுமாரான ஒரு புகைப்படப்பிடிப்பாளரால் கூடத் தாங்கிக் கொள்ள முடியாதுதான். ஆனால், தாங்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

இது 2010ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு புகைப்படம். இதில் இருப்பது அயர்லாந்து நாட்டில் விளைந்த உருளைக்கிழங்கு.

இந்தப் புகைப்படத்தை எடுத்திருப்பவர் பாரிஸைச் சேர்ந்த பிரபல புகைப்படக் கலைஞரான கெவின் அபோஷ்ச்.

"உங்கள் புகைப்படத்தை பாரிஸில் நடந்த கண்காட்சியில் பார்த்திருக்கிறேன். அதை வாங்கிக் கொள்ள ஆசைப்படுகிறேன்" என்று ஒரு பெயர் வெளியிட விரும்பாத தொழிலதிபர் கெவினின் வீட்டுக்கே வந்து கேட்க, போனால் போகட்டுமென்று கெவினும் சம்மதம் தெரிவிக்க சில தினங்களுக்கு பின்னர் ஒரு மில்லியன் யூரோ கொடுத்து அந்தத் தொழிலதிபர் இந்தப் புகைப்படத்தை விலைக்கு வாங்கிச் சென்றுள்ளார். இந்தச் செய்தி ஐரோப்பாவின் முன்னணி ஊடகங்கள் மூலமாக வெளியாகியுள்ளது.

ஹொலிவுட் பிரபலங்கள் ஜானி டெப், ஸ்டீபன் ஸ்பீல்பெர்க், நோபல் பரிசு பெற்ற மலாலா யூசுப்சாய் போன்றவர்களை பிரத்தியேகமாக புகைப்படமெடுத்த பிரபல புகைப்படக் கலைஞர்தான் கெவின் அபோஷ்ச்.



நுளம்புத்திரி தேவையில்லை. மின்சார நுளம்புவிரட்டி தேவையில்லை. தீங்கு விளைவிக்கும் மருந்துகளை தூக்கி எறியுங்கள்!

உங்கள் வீட்டிலில் இருந்து நுளம்புகளை விரட்ட ஒரு சக்திவாய்ந்த இயற்கை வழி!

ஒரு எலுமிச்சையை பாதியாக வெட்டவும். பின்னர் அந்தப் பாதியில் படத்தில் கொடுக்கப்பட்டது போன்று கராம்பை நெருக்கமாகச் சொருகவும், வீட்டில் நுளம்பு வரும் இடங்களில் வைக்கவும். ஒரு நுளம்பு கூட இந்த எலுமிச்சை, கராம்பு வாசனைக்கு வராது. இதை உங்கள் வீட்டில் செய்து பாருங்கள்.



# நுளம்பை விரட்டியடிக்க இதோ புதிய வழி!



# நிஜ மனிதர்களா? பொம்மைகளா?

மாஸ்கோவில் வசிக்கும் மைக்கேல் ஸஜ்கோவ் நிஜ மனிதர்களைப் போல பொம்மைகளைச் செய்வதில் சிறந்த கலைஞர். பொலிமர் களிமண்ணைக் கொண்டு பொம்மைகளின் உடலை உருவாக்குகிறார். கண்களுக்கு ஜெர்மன் கண்ணாடிகளைப் பயன்படுத்துகிறார். தலை முடியை பிரான்சிஸ் இருந்து வாங்குகிறார். இப்படி எல்லாம் சேரும்போது நிஜ மனிதர்களைப் போலவே பொம்மைகள் தோற்றம் அளிக்கின்றன. பொம்மலாட்டக் கலைஞராக இருந்த மைக்கேல், 2010ஆம் ஆண்டுதான் முதல் பொம்மையை உருவாக்கினார்.

உலகம் முழுவதும் இவருடைய பொம்மைகளுக்கு ரசிகர்கள் இருக்கிறார்கள். தான் எப்படி பொம்மையை உருவாக்குகிறார் என்பதையும் வீடியோவாக வெளியிட்டு வருகிறார் மைக்கேல். "இத்தாலியைச் சேர்ந்த லாரா ஸ்காடோலினி, பிரான்ஸைச் சேர்ந்த ஆன் மிட்ரானி ஆகியோரைப் பார்த்துதான் பொம்மைகள் உருவாக்கும் எண்ணம் வந்தது. என்னுடைய பொம்மைகள் பழமையை எடுத்துச் சொல்லக்கூடியவை. ஒவ்வொரு பொம்மையும் ஏதோ ஒரு சோகத்தை வெளிப்படுத்துவதாகவே உருவாக்குகிறேன். மற்ற பொம்மைகளைப் போல எல்லோருக்கும் என் பொம்மைகள் பிடிக்கும் என்று சொல்ல முடியாது. பொம்மை என்றாலே மகிழ்ச்சியை வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான் எல்லோரின் விருப்பமாக இருக்கும். பொம்மைகளைச் சேகரிப்பவர்களும் என் திறமை மீது ஆர்வம் உள்ளவர்களும்தான் என் வாடிக்கையாளர்கள்" என்கிறார் மைக்கேல்.

இத்தனை நேர்த்தியாக ஒரு பொம்மையை உருவாக்க முடியும் என்பதே ஆச்சரியமாக இருக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சந்தலையடி வாங்கிய மஞ்சள் காடைத்தனம்

- ஆசாத்

இலங்கையில் மஞ்சள் அங்கி அணிந்தவர்களின் போக்குகள் பௌத்த மதத்தின் பேராலும், சிங்கள தேசியத்தின் பெயராலும் கட்டுப்பாடற்ற முறையில் கோலோச்சி வருகின்றன. சில சிங்கள பௌத்த புத்திஜீவிகளும், அரசியல்வாதிகளும் இவற்றை வெறுத்த போதிலும்கூட பகிரங்கமாக எதிர்க்கத் துணிவற்றவர்களாகவே விளங்கினர். அதற்கு மதத்தின் பேரால் இவர்கள் மக்களிடம் கொண்டிருந்த செல்வாக்கும், இவர்களின் பின்னணியில் நின்று இவர்களை இயக்கிய அதிகார பலம் கொண்ட அரசியல் சக்திகளுமே காரணமாக அமைந்தன. இவர்களால் பாதிக்கப்படுபவர்கள் கூட மௌனம் காக்க வேண்டிய பரிதாப நிலையே நிலவியது. அவர்கள் பொதுபலசேன, சிஹல ராவய,இராவணசேன போன்ற பெயர்களில் நிறுவன மயப்பட்டு சக்திமிக்கவர்களாக விளங்கி வந்தனர்.

எனினும் கடந்த வாரம் இடம்பெற்ற சம்பவம் இவர்களின் ஒவ்வாத சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு அதிர்ச்சியளிக்கும் விதத்தில் தலையடி கொடுத்துள்ளது.

ஹோமகம நீதிமன்றத்தில் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிக்கொடாவின் கொலை தொடர்பான வழக்கு விசாரணை இடம்பெற்றது. எவருக்கும் கட்டுப்படாத வீரசூர நாயகனாக வலம் வரும் பொதுபலசேனாவின் பொதுச்செயலர் கலகொட அத்த ஞானசாரதேரர் ஊடகவியலாளரின் மனைவியையும், அவரின் சட்டத்தரணிகளையும் நீதிமன்ற வளாகத்தில் வைத்தே மோசமான முறையில் திட்டி மிரட்டியுள்ளார். குற்றம் சாட்டப்பட்ட படையினருக்குப் பதிலாக தன்னைச் சிறையிலடைக்கும் படி அரச ஊழியர்களிடம் அட்டகாசம் போட்டுள்ளார்.



உடனடியாகவே இந்த விடயத்தைச் சட்டத்தரணிகள் நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து அவர் ஞானசாரதேரரைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்துமாறு பொலிஸாருக்குக் கட்டளையிட்டார். ஆனால் பொலிஸார் அவரை உடனடியாகக் கைது செய்யவில்லை. அன்று மாலை மூன்று பௌத்த அமைப்புக்களும் கூடி ஞான.சார தேரரைக் கைது செய்ய விடுவதில்லை என முடிவெடுத்தன.

அடுத்த நாள் அவர் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையானார். வழமையாக அவர் எவ்வளவு பாரதூரமான குற்றங்களைச் செய்ததாக முறைப்பாடு செய்யப்பட்டாலும் அவர் பொலிஸ் பிணையில் விடப்படுவதுண்டு. இக் கைது நீதிபதியின் உத்தரவுக்கமைவானது என்பதால் அப்படிச் செய்ய முடியவில்லை.

அவர் நீதிமன்றில் நிறுத்தப்பட்ட போது நீதிபதி அவரை எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் நாள் வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டது. அப்போது அவரைப் பிணையில் விடும்படி கோரப்பட்ட போது நீதிபதி ரங்க திசநாயக்கா தெரிவித்த கருத்து மிகவும் முக்கியமானதாகும். அவர் உலகில் மிக வலிமையான பயங்கரவாதிகள் எனக் கருதப்படும் விடுதலைப்புலிகள் கூட நீதிமன்றத்தைச் சவாலுக்கு உட்படுத்தவில்லை எனவும், எனவே நீதிமன்றத்தை அவமதிக்கும் ஒருவரைப் பிணையில் விட்டால் அது ஒரு பிழையான முன்னுதாரணத்தை ஏற்றுக்கொண்டதாகி விடுமெனவும் தெரிவித்தார்.

ஞானசாரதேரரின் மஞ்சள் காடைத்தனத்துக்குக் கிடைத்த முதல் உச்சத்தலையடியாகும். இது மஞ்சள் அங்கிகளைப் போர்த்திக் கொண்டு சட்டவிரோதமாக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு இது ஒரு பலத்த எச்சரிக்கையுமாகும்.

ஆனால் காடைத்தனங்களில் ஊறிய வன்முறைப் பிக்குகள் கூட்டம் முழுமையாக அடங்கி விட்டதாகக் கூறி விட முடியாது. அவர்கள் நீதிமன்ற வாளாகத்துக்குள் புகுந்து ஞானசார தேரரை உடனடியாக விடுவிக்கும் படி அல்லது தங்களையும் கைது செய்யுமாறு ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதன் காரணமாக நீதிமன்ற நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன. அதையும் விட நீதிமன்ற கட்டிடங்களுக்குள் புகுந்தும் குழப்பங்களை விளைவித்தனர். ஞானசாரதேரரைக் கொண்டு செல்ல விருந்த சிறைச்சாலை வாகனத்தின் சில்லின் கீழ் படுத்து அதை நகர விடாமல் தடுத்தனர். இந்த நிலையில் சம்பவ இடத்துக்குக் கலகமடக்கும் பொலிஸார் கொண்டு வரப்பட்டனர். ஹோமாகம நகரமெங்கும் பதட்டநிலை நிலவியது. இறுதியில் பெரும் சிரமத்தின் மத்தியில் அவர் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அடுத்தநாள் நீதிமன்றம் கூடிய போது நீதிமன்றத்தில் புகுந்து குழப்பம் விளைவித்த அத்தனை பேரையும் கைது செய்து நீதிமன்றில் நிறுத்தும்படி பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அதே வேளையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து காத்திரமானதும் உண்மையான நீதியை எதிர்பார்ப்பவர் களுக்கு நம்பிக்கையூட்டுபனவாகவும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் மேற்படி சம்பவம் காரணமாக, தாம் ஒரு பௌத்தன் என்று கூற வெட்கப்படுவதாகவும், நீதிமன்றத்தின் சுயாதீனத்தைக் கேள்விக்குள்ளாக்க எவரும் அனுமதிக்கப்படப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்திருந்தார். அத்துடன் மேற்படி பிக்குகளின் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து உடனடியாக அறிக்கை தயாரித்து கோட்டை, மல்வத்த மகாநாயக்க தேரர்களுக்கு அனுப்பும்படி பொலிஸாருக்கு அவர் உத்தரவிட்டார்.


இது சட்டத்தையும் , ஒழுங்கையும் பாதுகாக்கும் ஒரு நியாயமான நடவடிக்கையை, மஹிந்த ராஜபக்ஷ குழுவினரும் இன மத வெறியர்களும் ஒரு மத விரோத நடிவடிக்கையாக மக்கள் மத்தியில் திரிவுபடுத்திக் காட்டி, குழப்பங்களை . ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பை முறியடிக்கும் ஒரு புத்திசாலித்தன்மான நடவடிக்கையாகும்.

பொதுபலசேனவும், ஞானசாரதேரரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் ஆதரவுடன் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் பின்புலத்துடன் ஊட்டி வளர்க்கப்பட்டமை எல்லோருமே நன்கு அறிந்த விடயமாகும். அவர்கள் எ்வ்வளவு

(18 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாதா தாவூத் இப்ராஹிம்

சண். சரவணக்குமார்

அதே நேரத்தில் சிறையில் இருந்த தாவூத்தும், அவனது ஆள்களும் பிணையில் வெளியே வந்தனர். இந்த முறை பயங்கரமான நெருக்கடிகள் உருவானது. மாஃபியாக்களுக்குள் யார் யார், எங்கு, எந்த எந்த தொழில்களை செய்வது என்று புதிய சட்டங்கள், புதிய பாதைகள், புதிய வழிமுறைகள் என்று தங்களுக்கான எழுதப்படாத சட்டங்களை கொண்டு வந்தனர். இந்தச் சட்டங்களை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால், இதுபோன்ற சட்டங்களை எல்லாம் கண்டுகொள்ளாமல் தாவூத் தனக்கான 'ஒரு அண்டர்கிரவுண்ட்' உலகத்தை உருவாக்கினான். இதனால் தாவூத்திற்கு எதிராகப் பல்வேறு எதிரிகள் உருவாகினர். ஆனால், அந்த நெருக்கடிகளை எல்லாம் தாவூத் அடித்து நொறுக்கி உடைத்தெறிந்து வந்தான்.

மும்பை மாஃபியாவின் வரலாறு அரபிக்கடல் அளவுக்கு ரத்தங்களால் சூழ்ந்து நிறைந்தது. குறிப்பிட்ட இடத்தில்தான் சண்டைகள் வரும் என்று யாரும் நினைக்க முடியாது. நீதிமன்றம், காவல் நிலையங்கள், ரயில் நிலையம், உணவு விடுதிகள், தேநீர் விடுதி என்று மும்பையின் மதிப்பு மிகுந்த இடங்கள் முதல் சாதாரண தெருக்கள் வரை, அதிகாரப் போட்டியில் நடந்த சண்டைகளில் ரத்தங்கள் சிந்திய நீண்ட வரலாறு மும்பைக்கு உண்டு. இன்று வரை முடிவில்லாமல் தொடர்வது காலத்தின் அகோர கோலம்.

ஐந்து ஆண்டுகளில் ஒரு இடம், பல்வேறு மாற்றங்களைக் கொண்டு புதியதாக உருமாற்றிக் கொள்கிறது. ஆனால், ஐம்பது ஆண்டுகள் கடந்த பிறகும் மும்பை மாநகரில் ரத்தம் ஓடுவது மட்டும் நிற்கவே இல்லை. தாவூத் இப்ராஹிம் பாகிஸ்தானில் குடும்பத்துடன் குடியுரிமை பெற்று, ஐ.எஸ்.ஐ அமைப்பின் பாதுகாப்பில் இருந்து கொண்டு, துபாயை தலைமை இடமாகக் கொண்டு, உலகத்தின் பல்வேறு நாடுகளில் தனது மாஃபியா சாம்ராஜ்யத்தை கன கச்சிதமாக நடத்தி வந்தாலும், தாவூத்தின் கண்கள் எப்பொழுதும் அவனது சொந்த ஊரான மும்பையைப் பார்த்துக்கொண்டே இருக்கும். உலகத்தின் பல்வேறு முக்கியமான தலைவர்களையும், அதிகாரம் பொருந்திய முக்கிய புள்ளிகளையும் சந்திக்கும் தருணங்களில், அவர்களுடன் இயல்பாக பேசும் பொழுதும் தாவூத், மும்பையை பற்றி பேசாமல் இருப்பதில்லை. அந்த அளவிற்கு மும்பை மீது தாவூத்திற்கு அளவு கடந்த காதல்.

தமிழ்நாடு, குஜராத் போன்ற இந்தியப் பகுதிகளில் இருந்து மும்பைக்கு வந்தவர்களும், ஆப்கானிஸ்தானில் இருந்து வந்த பல்வேறு நபர்களும் ஆரம்பகாலம் முதல் இன்று வரை தங்களது இருப்பை நிலை நிறுத்திக்கொள்ள பல்வேறு யுத்தங்களை நடத்திக்கொண்டு வருகின்றனர். இதன் பலன் பல்வேறு உயிர்கள் போனதுதான் மிச்சம். எவன் கை ஓங்கி வருகிறதோ அவனது கையை உடைக்கவும், அவனை சிதைக்கவும், பொலிஸ் அவர்களுக்கு அடுத்த இடத்தில் இருந்த பல்வேறு நபர்களுக்கு மறைமுகமாக உதவிகள் செய்து, பல்வேறு வழக்குகளில் இருந்து தப்பிக்க வைத்து வளர்த்து விட்டது. அதில் முக்கியமான துருப்புச் சீட்டு தாவூத்.



தாவூத் ஆரம்ப காலங்களில், பொலிஸுக்கு பல்வேறு தகவல்களை வழங்கி வந்தது பிறகுதான் தெரிந்தது. அவனது சிறு வயது காலம் முதல் பல்வேறு தாதாக்களின் வேலைகளை போட்டுக்கொடுத்து வந்தான். அதன் மூலம் அவனுக்கு பொலிஸ் வட்டாரங்களில் செல்வாக்கு இருந்தது என்று, அவன் வளர்ந்த பிறகுதான் பல்வேறு நபர்களுக்கு தெரிய வந்தது. ஆடு புலி ஆட்டம் போல யார் யாரை, எப்பொழுது எங்கு வெட்டி சாய்ப்பார்கள் என்று தெரியாத மர்ம உலகமாக இருந்து வந்தது மும்பை மாஃபியா உலகம். இருந்தாலும் அவர்கள் ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியாக இருந்து வந்தனர். தொண்டைக்குழி வரை மது, அளவிற்கு மீறிய பணம், மிதம் மிஞ்சிய பேரழகிகள் என்று அவர்களின் வாழ்க்கை நிஜமான வாழும் சொர்க்கமாக இருந்து வந்தது.

சிறையில் இருந்து வந்ததும் நடந்த தொழில் சண்டையில் அதிக உயிர்கள் பலியாகின. இதற்கு ஒரு முடிவு கட்ட நினைத்த மஸ்தான், கரீம் லாலா, தாவூத் மற்றும் ஜீனாபாய் என்கிற லேடி உள்பட ஐந்திற்கும் மேற்பட்ட குழுக்கள் ஒன்றாக கூடி இருந்தார்கள். ஜீனாபாய் மும்பையின் மாஃபியா வட்டாரங்களில் தவிர்க்க முடியாத முன்னோடி லேடி. பல்வேறு தாதாக்கள் ஜீனா பாய் பெயரை கேட்டால் பதுங்கி போவார்கள். மஸ்தான், கரீம் லாலா, தாவூத் உள்பட பல்வேறு நபர்கள் ஜீனா பாயை சகோதரி, அத்தை என்று உறவு சொல்லி அழைப்பதுண்டு. கடைசியில் எழுதப்படாத மாஃபியா உடன்படிக்கை ஒன்று அங்கு உருவானது. குர்ஆன் மீது சத்தியம் செய்து கொண்டு, இனி ஒருவரை ஒருவர் தாக்கி கொள்ளக் கூடாது என்று முடிவு எடுக்கப்பட்டது. அனைவரும் சத்தியம் செய்து கொண்டு அவர்களின் தொழில்களை நடத்த தொடங்கினர்.

காலம் உருண்டு ஓடியது. தாவூத் தனது தொழிலை விரிவுபடுத்த தொடங்கினான். அதிக பணமும் புகழும் சேரும் பொழுதே எதிரிகளும் உருவாகி விடுகின்றனர். அப்படிச் சத்தமில்லாமல் பல்வேறு எதிரிகள் வந்ததும், கண்ணுக்குத் தெரிந்த எதிரிகளை மெல்ல மெல்ல கொலை செய்ய ஆரம்பித்தான் தாவூத். ஆனால், தாவூத்தின் நிழலாக வலம் வந்த சோட்டா ராஜன், பின்னாளில் தாவூத்தின் டி கம்பனியை ஆட்டம் காண வைத்தான். அதிகாரத்தின் மறுபக்கம் ஒளிந்து கொண்டு தாவூத்தை பல்வேறு நாடுகளுக்கு துரத்தினான். நிம்மதி இல்லாமல் ஓடிய தாவூத், சோட்டா ராஜனின் தலைக்கு பல்வேறு வழிகளில் குறிவைத்தான். 1994இல் வைத்த குறி 2015 வரை தொடந்து கொண்டே இருந்தது. அதன் இறுதிக்கட்டம்தான், இந்தோனேசியாவில் உள்ள பாலீத்தீவில், சோட்டா ராஜன பொலிஸ் கைகளில் சிக்கியது. இந்த ஒரு சம்பவம் பொலிஸ் வட்டாரங்களில் 'கைது' என்றும், மாஃபியா வட்டாரத்திலும், சில பத்திரிகை வட்டாரங்களில் 'தாவூத்தின் கைகளில் இருந்து தப்பிக்க சரண்டர்' என்றும், இது 'தாவூத்திற்கு விரித்த வலை' என்றும் பேசப்படுகிறது.

தாவூத்தின் முன்னணி தளபதியும், அவனுக்கு மிகவும் பிடித்தவனுமான சோட்டா ராஜன் ஏன் தாவூத்திற்கு எதிரியானான்?

சோட்டா ராஜனின் அப்பா சதாஷ் ஒரு சாதாரண மில் தொழிலாளி. மும்பையை ஒட்டிய சிறு கிராமம் ஒன்றில் இருந்து மும்பைக்கு பிழைக்க வந்த குடும்பம் சதாஷிவின் குடும்பம். சதாஷிவின் ஆறு பிள்ளைகளில் ஒருவன்தான் ராஜேந்திர நிகல்ஜி என்னும் சோட்டா ராஜன். தனது இளமைக்காலத்தில் மும்பையில் உள்ள பல்வேறு தியேட்டர்களில் பிளாக் டிக்கெட் விற்று வந்தான். அப்பொழுது நடக்கும் அடிதடி சண்டைகள் மூலம் தெரு ரவுடியாக மாறினான். அதன் பிறகு படா ராஜன் என்பவனிடம் இருந்து தெற்கு மும்பை பகுதியில் உள்ள ஒருவரின் வீட்டை காலி பண்ண செய்யும் வேலை வந்ததும், அந்த வேலையை எந்தவித அதிர்வுகளும் வராமல் செய்து கொடுத்தான் சோட்டா ராஜன். அதன் பிறகு படா ராஜனின் எதிரி ஒருவனை சந்தையில் வைத்து தாக்கிய சம்பவம், இன்னும் பிற முக்கியமான சம்பவங்கள் மூலம் படா ராஜனின் இதயத்தில் இடம் பிடித்து, படா ராஜனிடம் நிரந்தரமாக வேலை பார்க்க ஆரம்பித்தான். அதன் பிறகு படா ராஜனின் எதிரியான அப்துல் குரூப்பில் உள்ள முக்கியமான ஒருவனை படா ராஜன் கொலை செய்ததால் படா ராஜனை, அப்துல் நீதிமன்றத்தில் வைத்து ஒரு பொலிஸ் அதிகாரி மூலம் சுட்டுக்கொன்றான். சில கொலைகளை யார் செய்வார்கள், எதற்கு செய்வார்கள் என்று தெரியாது. அது போலதான் காவல்துறை அதிகாரி மூலம் படா ராஜனை சுட்டுக்கொன்றனர்.

(தோட்டக்கள் பாயும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புல்லட் வண்டியில் மணப்பெண்



குஜராத் மாநில ஆமதாபத்தில் ஒரு திருமண மண்டபத்தில் மண மேடைக்கு புல்லட் வண்டியில் வந்து உறவினர்கள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார் மணப்பெண். அந்த புதுமைபெண்ணின் பெயர் ஆயிஷா உபத்தியாய். 26 வயதாகும் இவர் கல்லூரி ஒன்றில் 'கம்யூட்டர் சயின்ஸ்' பேராசிரியையாக உள்ளார்.

வழக்கமாக திருமணத்தின் போது தோழிகள் மற்றும் உறவினர்கள் புடைசூழ, மலர்களால் அலங்கரிக்கப் பட்ட குதிரை வண்டி அல்லது காரில் மணமகள் ஊர்வலமாக வருவது வழக்கம். ஆனால், இவர்களில் இருந்து வேறுபட்டு, புல்லட் வண்டியில் வந்தது அங்கிருந்தவர்களை ஆச்சரியபடவைத்தது.

மணமகள் உடையில் கம்பீரமாக புல்லட்டை ஓட்டியபடி புன்னகையுடன் ஆயிஷா வந்தார். அப்போது பின்னணி இசையில் திருமணமண்டபமே அதிர்ந்தது. இந்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவி ஆயிஷாவுக்கு இவர்தான் உண்மையான புல்லட் ராணி என கூறி உள்ளன.

ஆயிஷாவிற்கு புல்லட் ஓட்டுவது மிகவும் பிடிக்குமாம். தனது 13 வயதில் இருந்தே அவர் பைக் ஓட்டி வருகிறாராம். அதனால் தான் திருமணத்தின் போது ஒரு அலங்கார சிலையைப் போல் வராமல், புல்லட்டில் வந்து அனைவரையும் அசர வைக்க முடிவு செய்தாராம். ஆயிஷாவின் இந்த விருப்பத்திற்கு அவரது பெற்றோரும் குறுக்கே நிற்கவில்லை.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் புல்லட் ராணியாக வலம் வரும் ஆயிஷாவின் கணவருக்கு புல்லட் ஓட்டத் தெரியாதாம். இதனால், திருமண அரங்கிற்குள்ளேயே தனது கணவரையும் புல்லட்டில் அமர வைத்து வலம் வந்தார் ஆயிஷா.



# ஒரே ஒரு பயணிக்காக இயக்கப்பட்ட விமானம்!

ஒரே ஒரு பயணிக்காக, பிலிப்பைன்ஸ் விமான சேவை நிறுவனம் பயணத்தை தொடர்ந்த சம்பவம் பரவலாக பேசப்பட்டு வருகிறது.

ஆஸ்திரியா நாட்டின் பயண கட்டுரை எழுத்தாளரான 28 வயது அலெக்ஸ் சைமன் என்பவர், பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு சுற்றுலா சென்றுள்ளார். தலைநகர் மணிலாவில் தங்கியிருந்த அவர், அங்கிருந்து 315 கிலோ மீற்றர் தென் பகுதியில் அமைந்துள்ள பொராகே தீவுக்கு செல்ல விமானத்தில் முன்பதிவு செய்துள்ளார்.

சம்பவத்தன்று விமான நிலையம் வந்த அவருக்கு மகிழ்ச்சியான செய்தி ஒன்று காத்திருந்தது. அவர் மட்டுமே பயணத்திற்காக பதிவு செய்துள்ளதால் காத்திருக்க தேவை இல்லை எனவும், உடனடியாக பயணத்தை ஆரம்பிக்க உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த செய்தி கேட்டு குதூகலமான அலெக்ஸ், 2 விமானிகள் மற்றும் சில ஊழியர்களுடன் தனியொருவராக பயணம் செய்துள்ளார். விமானி மற்றும் விமான ஊழியர்களுடன் தனது மகிழ்ச்சியை பகிர்ந்துகொண்ட அவர், தனது அனுபவத்தை 3 நிமிடங்கள் கொண்ட ஒரு வீடியோ பதிவாக சமூக வலைதளத்தில் பதிவேற்றியுள்ளார்.

# 20 ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் புதிய விமானம் தயாராகிறது

மணிக்கு 1,195 கிலோமீற்றர் வேகத்தில் பறப்பது என்பது ஒலி பயணிக்கும் வேகத்துக்கு இணையானதாக கருதப் படுகிறது. இந்த வேகத்தை ஒரு மேக் (Mach) வேகம் என்று கூறுவதுண்டு.

இந்த நிலையில், கனடாவைச் சேர்ந்த 'பொம்பார்டியர்' விமான தயாரிப்பு நிறுவனத்தின் தலைமை பொறியாளரான சார்லஸ் என்பவர் ஒலியைவிட பத்து மடங்கு வேகத்தில் சீறிப்பாயும் 'ஸ்க்ரீம்ர்' என்ற ஹைப்பர்சோனிக் விமானத்தை தயாரிக்கப் போவதாக அறிவித்திருந்தார்.


தற்போது அதைவிட இருமடங்கு அதிக வேகத்திலும், 'கொன்கோராட்' ரக விமானத் தைவிட 12 மடங்கு அதிக வேகமாகவும் பறக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்த 'அன்ட்டிப் போட்' என்ற விமானத்தை வடிவமைப்பதற் கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டு வரு கிறார். பத்துப்பேரை ஏற்றிச் செல்லக் கூடிய வகையில் உருவாக்கப்படும் இந்த 'ஹைப்பர் சொனி'க் விமானம் மணிக்கு 20 ஆயிரம் கிலோமீற்றர் வேகம்வரை பறக்கும் என சார்லஸ் கூறுகிறார்.

உதாரணமாக, இங்கிலாந்து தலைநகரான லண்டனில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க் நகரம் 5,567 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. இந்த இரு நகரங்களுக்கும் இடையிலான பயண நேரம் தற்போது சுமார் எட்டு மணி நேரமாக உள்ளது. இந்த 'அன்ட்டிப்போட்' விமானம் தயாராகி விட்டால் வெறும் 11 நிமிடங்களிலேயே லண்டனில் இருந்து நியூயோர்க் நகரை சென்றடைந்து விடலாம்.

நான்கு இறக்கைகள் கொண்ட 'அன்ட்டிப்போட்'டின் இறக்கைகளில் 'ரொக்கெட்'களை உந்திக் கிளப்பும் 'பூஸ்ட்டர்கள்' பொருத் தப்பட்டு இருக்கும். இந்த 'பூஸ்ட டர்கள் சில வினாடிகளுக்குள் ஐந்து மேக் வேகத்தில் 40 ஆயிரம் அடி உயரத்துக்கு விமானத்தை உந்திச்செல்ல வைக்கும். பின்னர், 'பூஸ்ட்டர்கள் மட்டும் தனியாக கழன்று பூமிக்கு திரும்பிவிடும்.

அதன்பின்னர், விமானத்தில் உள்ள 'சூப்பர்சொனிக்' இயந்திரம் இயங்க ஆரம்பித்து, உச்சபட்ச வேகமான 24 மெக் வேகத்தை அடையும். அந்த வேகத்தில் இயந்திரம் அதிகமாக சூடேறாமல் தடுப்பதற்கு விமானத்தின் மூக்கு மற்றும் இறக்கை பகுதியில் அமைக்கப்படும் சிறிய துவாரங்களின் வழியாக காற்று உறிஞ்சப்பட்டு, விமானத்தின் மையப்பகுதியை குளிரூட்டும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் என சார்லஸ் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வளவு சிறப்புவாய்ந்த இந்த 'அன்ட்டிப்போட்' விமானத்தின் திட்ட வரைப்படத்தை இந்தியாவை சேர்ந்த அபிஷேக் ராய் என்பவர் தயாரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 492 7419

## மக்கள் நலனில் கலால் பகுதி அக்கறை கொள்வது எப்போது...?

போதைப்பொருள்பாவனையைக்கட்டுப்படுத்த தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்படும் என்ற பொலிஸ் திணைக்களத்தின் திட்டத்தை முல்லைத்தீவுக்கும் விரைந்து விஸ்தரிக்க வேண்டும்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட மக்கள், கடந்த மாதம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

போதைப்பொருள் பாவனையைத் தடுக்கும் திட்டங்களில் ஒன்றாக, பொதுமக்களிடம் இருந்து தகவல்களை இரகசியமாகப் பெறும் திட்டம் இப்போது நாட்டின் பல பாகங்களிலும் செயற்பட்டு வருகிறது.

மொத்தத்தில், போதைப்பொருள் பாவனை, அதனை நாடியவியாபாரம் நாட்டின் சகல பிரதேசங்களிலும் பரவிப் படர்ந்து வருவதால் மேற்போந்த புதிய செயற்பாடு வரவேற்கத்தக்கது. அது மென்மேலும் பரவலாக்கப்படுவது அத்தியாவசியம் ஆகிவிட்டது.

மக்கள் நடமாட்டம் மிகுந்த பிரதான போக்குவரத்துப் பாதைகளை, பாடசாலைகளை, வழிபாட்டுத் தலங்களை அண்மித்தும்- அண்டியுமே - மதுபான நிலையங்கள், வடக்கின் மாவட்டங்களில் இயங்குவது கண்கூடு.

காலை, மாலை என்ற வேறுபாடு இன்றி, இனிப்பை மொய்க்கும் ஈக்களாக, பெரும் எண்ணிக்கையானோர் இத்தகைய இடங்களில் கூடுகின்றனர். அவற்றைக் கடந்தே மாணவர்களும் செல்கிறார்கள். சகல வகையான குற்றச் செயல்களுக்கும் மூலாதாரமாக அமைவது போதை நிலையே ஆகும்.

இந்த ஆண்டுக்கான மதுபான வியாபாத்துக்குரிய 'லைசென்ஸ்' முன்னர் முறைகேடாகப்பெறப்பட்ட நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆயினும், ஏதோ வழியில், வகையில் தில்லுமுல்லுகள் ஊடாகஅவை வழங்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கசிந்துள்ளன!

வடக்கில், அரசின் அனுசரணையுடன் போதைப் பொருள் பாவனை ஊக்குவிக்கப்படுகிறதா? என்ற மிகப் பென்னம்பெரிய, வினா உயர்ந்து நிற்கிறது.

பல உயர்கல்வி நிலையங்களை உள்ளகத்தே உள்ள கொக்குவில் , திருநெல்வேலிப் பகுதிகளில் இயங்கும் மதுபான நிலையங்களைக் கணக்கெடுத்தால், மன அழுத்தம் வரும் அளவுக்கு ஆச்சரியம் அளிக்கும் கறுப்புப் புள்ளிப் பெறுபேறுகள் மேற்கிளம்பும்.

ஒட்டு மொத்தத்தில் -

வடமாகாணத்தில் இயங்கும் நிலையில் உள்ள அனைத்து மதுபான சாலைகளுக்கும், இந்த ஆண்டுக்கு உரிய அனுமதியை கலால் திணைக்களம் வழங்கி உள்ளது.

அந்தத் திணைக்களத்தினர் தமது வருமானத்தையும், மதுபானசாலை உரிமையாளர்கள் மீதான விவாதத்தையும் முதன்மைப்படுத்திச் செயற்படுவதாக வண பிதா டேவிட் புட்டுக்காட்டியுள்ள, குற்றஞ்சாட்டியுள்ள நிலையில் -

அது குறித்து நல்லாட்சி அரசும், ஜனாதிபதியும் கருத்தூன்றிச் செயற்படுவது எப்போது?

# இலங்கைத் தமிழரின் துயரங்களை உண்மை வடிவத்தில் பதிவிட வேண்டும்

## கவிஞர் வைரமுத்து அதனைச் செய்வாரா?

உழவர் திருநாளை இந்த ஆண்டு உவப்புடன் கொண்டாடிய மக்களுக்கு வைரமுத்துவின் இலங்கை விஜயம் பேசு பொருளாக மாறிவிட்டது. இன்றைய இளைஞர்கள் சிலரின் ஆதர்சன கவிஞர் வைரமுத்து. அவரின் கவிதைகளை சிலாகிப்பவர்கள் அவரின் வருகையால் பேருவகை அடைந்தனர். வடமாகாணசபை நடத்திய உழவர் விழாவில் வைரமுத்து கலந்து கொண்டு கவிமழை பொழிந்தார். அவரின் கவிமழையில் நனைந்தவர்கள் புளாங்கிதமடைந்தனர்.



வைரமுத்து வருகிறார் என்றதுமே அவரைக் காணவேண்டும். அவரது பேச்சைக் கேட்க வேண்டும். அவருடன் அளவளாவ வேண்டும். அவருடன் புகைப்படம் எடுக்க வேண்டும் எனப் பலர் விரும்பினர்.

வைரமுத்து எதுவித குறையும் வைக்கவில்லை. அவருடன் தமிழ் துள்ளி விளையாடியது. ஊடக வெளிச்சமும் வைரமுத்துவை பிரகாசிக்கச் செய்தது.

இலங்கைக் கலைஞர்களைச் சந்தித்த போது, கவிஞர் வைரமுத்து அவர்களுடனான பொழுதை பிரயோசனப் படுத்தினர். வைரமுத்துவைச் சந்தித்தவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். வைரமுத்துவின் புத்தகங்களைப் பொக்கிஷமாக வைத்திருப்பவர்கள் தமது புத்தகங்களை அவரிடம் கொடுத்து பேருவகை அடைந்தனர். வைரமுத்தின் வீட்டில் எனது புத்தகம் இருக்கிறது என்ற கலைஞனுக்குரிய இறுமாப்பு அவர்களிடம் உண்டாகியது.

இந்தியாவில் இருந்து பிரபலங்களை அழைத்து வருபவர்கள் அவர்களைத் தமது கட்டுப் பாட்டில் வைத்திருப்பார்கள். ஆனால் வைரமுத்துவை அழைத்து வந்தவர்கள் அந்தக் கட்டுப்பாட்டைத் தகர்த்தனர். வைரமுத்துவைச் சந்தித்த பிரமிப்பு சிலரிடம் இருந்து இன்னமும் விலகவில்லை.

வடமாகாண சபை நடத்திய உழவர் பெரு விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. இந்தியப் பிரபலங்களின் பங்களிப்புடன் உழவர் பெருவிழாவை

வைரமுத்து வருகிறார் என்றதுமே அவரைக் காணவேண்டும். அவரது பேச்சைக் கேட்க வேண்டும். அவருடன் அளவளாவ வேண்டும். அவருடன் புகைப்படம் எடுக்க வேண்டும் எனப் பலர் விரும்பினர்.

வைரமுத்து எதுவித குறையும் வைக்கவில்லை. அவரு டன் தமிழ் துள்ளி விளையாடியது. ஊடக வெளிச்சமும் வைரமுத்துவை பிரகாசிக்கச் செய்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஊர்மிளா

**எம்.ஜி.ஆரும்,இந்திரா காந்தியும் இலங்கைத் தமிழரின் விடுதலைக்காக செயற்பட்டனர். ராஜிவின் கொலை எல்லாவற்றையும் புரட்டிப்போட்டது. இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாட்டை இந்தியா கை விட்டது. புலிகளை அழிக்க வேண்டும் என்று கோபங்கொண்டு இலங்கையில் தமிழர்கள் அழிக்கப்படுவதை வேடிக்கை பார்த்தது இந்தியா. வைரமுத்து தனது வைரவரிகளில் இதனை பதிவிடுவாரா என்ற கேள்வி பாமர மக்களிடமும் உள்ளது.**

நடத்துவதை ஒரு சம்பிரதாயம் ஆக்கப்பட்டது. பிரேமதாஸ தலைமையிலான மேதினமும் இப்படித்தான் நடைபெற்றது. வட இந்திய தென்னிந்திய சினிமா நட்சத்திரங்கள் மேதின விழாவில் கலந்து கொள்வதால் அங்கு கூட்டம் அலை மோதியது.

ஈழத்தமிழரின் துயரக் காவியத்தை எழுதப் போவதாக வைரமுத்து சூளுரைத்தார். தமிழ் மக்கள் அனுபவித்த துயரத்தை காவியமாக எழுதும் ஆற்றல் அவரிடம் தேவைக்கு அதிகமாக உள்ளது. அந்தக் காவியத்தில் உண்மை உள்ளபடி வெளிவருமா என்ற சந்தேகம் பிரமாண்டமாக முன்னெழுந்துள்ளது. தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு முள்ளி வாய்க்காலில் புதைக்கப்பட்டதைப் பற்றிய உண்மையை எழுத அவருக்குத் துணிவு வரவேண்டும்?

இலங்கைத் தமிழரின் துயரத்தைப் போக்க கைகொடுத்த இந்தியா இறுதியில் எல்லாவற்றையும் அழிக்க உதவியது. எம்.ஜி.ஆரும், இந்திரா காந்தியும் இலங்கைத் தமிழரின் விடுதலைக்காக செயற்பட்டனர். ராஜிவின் கொலை எல்லாவற்றையும் புரட்டிப்போட்டது. இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாட்டை இந்தியா கை விட்டது. புலிகளை அழிக்க வேண்டும் என்று கோபங்கொண்டு இலங்கையில் தமிழர்கள் அழிக்கப்படுவதை வேடிக்கை பார்த்தது இந்தியா. வைரமுத்து தனது வைரவரிகளில் இதனை பதிவிடுவாரா என்ற கேள்வி பாமர மக்களிடமும் உள்ளது.

ஐரோப்பிய நாடொன்றில் இலங்கைத் தமிழ் மக்களின் துயரத்தை எழுதப் போவதாகக் கூறினார்.



இலங்கைத் தமிழ் மக்களுக்காக கருணாநிதி இரண்டு முறை ஆட்சியைப் பறிகொடுத்தது வரலாறு. அமைதி காக்கும் படையின் அட்டகாசத்தைப் பொறுக்க மாட்டாது கொந்தளித் தார். அமைதி காக்கும் படை நாடு திரும்பியபோது தனது கோபத்தை வெளிப்படுத்துவதற்காக முதலமைச்சரான கருணாநிதி அதனை வரவேற்கப் போகவில்லை. முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் போது, தனது ஆட்சியை தக்க வைப்பதற்காக அமைதி காத்தார். கருணாநிதியின் தீவிர விசுவாசியான வைரமுத்து வின் காவியத்தில் இது பதியப்படுமா என்பதற்கான பதிலை யார் தருவார்.

தெனாலி, புன்னகை மன்னன், கன்னத்தில் முத்தமிட்டால் போன்ற தமிழ்ப் படங்கள் இலங்கைத் தமிழ் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தின. இசைப்பிரியா பற்றிய படமும் வேதனை யைத் தந்தது. தெனாலியில் கமல் பேசும் 'இலங்கைத்தமிழ்' இலங்கைத் தமிழ் மக்களின் மனதைப் புண் படுத்தியது. கன்னத்தில் முத்தமிட்டால் படத்தில் இடம் பெற்ற 'விடைகொடு எந்தன் நாடே' எனும் பாடலை கேட்கும் போது உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் வெளிவருவது தவிர்க்க முடியாததுதான். அதே போன்ற ஒரு உணர்ச்சியை வைரமுத்து எழுதப் போவதாகக் கூறிய காவியத்தில் காண முடியாது என எதிர்பார்க்கலாம். வைரமுத்து சிறந்த கவிஞர் மட்டுமல்ல, அவர் பல்துறை விற்பன்னரும் ஆவார். அவருடைய கதையைப் படித்த ஜெயகாந்தன் பாராட்டிய கடிதம் சஞ்சிகையில் வெளியானது. அது போலியான கடிதம் என நிரூபிக்கப் பட்டபோது மௌன்ம் காத்தார்.

இந்திய எழுத்தாளர்களின் படைப்புக்கள் இலங்கைத் தமிழ் மக்களின் வீடுகளில் உள்ளன. இலங்கை எழுத்தாளர்களின் நூல்களை இந்தியாவில் உள்ள பிரபல எழுத்தாளர்களும் இலக்கியவாதிகளும் தேடி வாங்குவது இல்லை. தமக்குத் தெரிந்த ஒருசிலரின் புத்தகங்களை மட்டும் வாங்குவார்கள். இலங்கைப் புத்தகங்கள், சஞ்சிகைகள்,பத்திரிகைகள் என்பன தமிழகத்தில் விற்பனை செய்யப் படுவதில்லை. இது ஒருவழிப் பாதையாக உள்ளது. வைரமுத்துவிடம் நூற்றுக் கணக்கான புத்தகங்கள் கொடுக்கப்பட்டன. அவற்றை எல்லாம் அவர் படிப்பார் என்பதற்கு உத்தரவாதம் உண்டோ?.

அர்த்தமுள்ள இந்து மதம், இயேசு காவியம் ஆகியவற்றின் மூலம் கண்ணதாசனும், பாண்டவர் பூமி,அவதார புஷர், இராமானுஜர் ஆகியவற்றின் மூலம் வாலியும் இன்றும் வாழ்கின்றனர். அவற்றைப் போன்ற ஒருகாவியத்தைப் படைக்க.வேண்டும் என்ற ஆசை வைரமுத்துவிடம் நீண்ட நாள்களாக உள்ளது. அதற்குரிய களமாக இலங்கையைத் தேர்ந்தெடுத்துள்ளார். ஆனால், கவிஞர் வைரமுத்துவை வரவேற்க இலங்கைத் தமிழ் மக்கள் தயாராக உள்ளனர். அவரது அரசியலை ஏற்றுக்கொள்ளத் தயாரா என்பதுகேள்விக்குறிதான்!

**தெனாலி, புன்னகை மன்னன், கன்னத்தில் முத்தமிட்டால் போன்ற தமிழ்ப் படங்கள் இலங்கைத் தமிழ் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தின. இசைப்பிரியா பற்றிய படமும் வேதனையைத் தந்தது. தெனாலியில் கமல் பேசும் இலங்கைத்தமிழ் இலங்கைத் தமிழ் மக்களின் மனதைப் புண் படுத்தியது. கன்னத்தில் முத்தமிட்டால் படத்தில் இடம் பெற்ற விடைகொடு எந்தன் நாடே எனும் பாடலை கேட்கும் போது உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் வெளிவருவது தவிர்க்க முடியா ததுதான். அதே போன்ற ஒரு உணர்ச்சியை வைரமுத்து எழுதப் போவதாகக் கூறிய காவியத்தில் காண முடியாது என எதிர்பார்க்கலாம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாதவனை மற்றுமொரு சுற்றுக்குத் தெம்பாகத் தயார் படுத்தி வெளிவந்திருக்கும் படமே 'இறுதிச்சுற்று' எனலாம்.

'வை நட்ஸ்டுடியோஸ்', திருக்குமரன் 'என்டர்டெயின் மெண்ட்' ஆகிய இரு தயாரிப்பு நிறுவனங்களுடன் 'யுடிவிமோசன் பிக்சர்ஸ்' பெரிய நிறுவனமும் ஒன்றாக இணைந்து தமிழ், இந்தி இரு மொழிகளிலும் குத்துச் சண்டை சம்பந்தப்பட்ட கதையுடன் படமாக வந்திருக்கும் இறுதிச் சுற்று.,

இந்திய குத்துச்சண்டை., குறிப்பாக பெண்களுக்கான இந்திய குத்துச்சண்டை தெரிவில் இருக்கும் தகிடுதத்தங்களை அழகாக தோலுரித்து காட்டியிருப்பதோடு, அதையும் தாண்டி அவ்விளையாட்டில் நம் வீராங்கனைகளின் சாதனைகளையும் அழகாக பட்டியலிட்டு ஜெயித்திருக்கிறது.

கதைப்படி, பெண்களுக்கான முன்கோபக்கார குத்துச்சண்டை பயிற்சியாளராக மாதவன், சில வருடங்களுக்கு முந்தைய பந்தயத்தில் நடந்த குத்துச்சண்டை அரசியலால் தன் மனைவியையும், உடல் தகுதியையும் ஒரு சேர இழந்த குத்துச் சண்டைவீரர். ஆனாலும் குத்துச்சண்டைக்காக தன், உடல் பொருள், ஆவி அனைத்தையும் கொடுக்கத் தயாராக இருக்கும் அவர், பெண்களுக்கான குத்துச்சண்டைப் பயிற்சியாளராக ஹரியானாவில் இருக்கிறார். பழைய பஞ்சாயத்து முறையால் சென்னைக்குத் துரத்தப்படும் அவர், இங்கு வந்து மீனவகுப்பத் தில் குத்துச்சண்டை வீராங்கனை யாக பல திறமைகளுடன் சுற்றித் திரியும் ரித்திகா சிங்கை தேடிப் பிடித்து இந்திய வீராங்கனை யாக, சர்வதேச வீராங்கனை யாக்கி இந்தியாவுக்கு பெருமை தேடித் தருவதும், அவர் மூலம் இழந்த இல்வாழ்க்கையை திரும்ப பெருவதும் தான் 'இறுதிச் சுற்று' படத்தின் கரு, கதை, களம், காட்சிப்படுத்தல் எல்லாம்!



அரசியலால் குத்துச் சண்டையில் தான் தோற்றதால், மனைவி மாற்றானுடன் ஓடிப்போன துக்கத்தை காட்டிக் கொள்ளாமல் உடன் படுக்கும் பெண்களில் தொடங்கி, குத்துச்சண்டை தெரிவுக்குழு ஆங்காங்கே தான் படும் அவமானங்களைத் தாங்கிக் கொண்டு குத்துசண்டையில் இந்தியாவே வியக்கும் ஒரு வீராங்கனையை உருவாக்குவதில் மேடி காட்டும் முனைப்பு மெய்சிலிர்க்க வைக்கிறது.

பீர் குடித்தபடி விசாரணை ஆணைக்குழுவுக்கு வந்து, அமர்ந்து கொண்டு நான், பீர் குடிக்கும் நேரத்தில் நீங்க சந்திப்பை ஏன்? வச்சீங்க.? என கோபப்படுவதில் தொடங்கி., இந்தியாவுக்காக ஒரு சிறந்த வீராங்கனையை தன் பணத்தில் உருவாக்குவது வரை சகலத்திலும் சக்கை போடு போட்டு ஒரு சாராண கதாநாயகனாக சலாம் போட வைத்திருக்கிறார் மேடி என்றால் மிகையல்ல!

மீனவ குப்பத்து அடாவடிப் பெண்ணாக, வீராங்கனை மதியாக ரித்திகா சிங் பக்கா! நிஜமான குத்துசண்டை வீராங்கனை என்பதாலோ என்னவோ, அது, சம்பந்தப்பட்ட கதையில் அம்மணி வெளுத்துகட்டியிருக்கிறார்.

குத்துச் சண்டைத்தளத்திற்குள் அவர் காட்டும் சாகசத்திலாகட்டும், மாதவனிடம் மையல் கொள்வதிலாகட்டும் எல்லாவற்றிலும் முற்றிலும் புதுசாக தெரிகிறார் ரித்திகா.

லக்ஸாக ரித்திகாவின் அக்காவாக வரும் மும்தாஜ் சர்க்கார், மாதவனின் ஓடிப்போன பொண்டாட்டியின் அப்பாவாக வரும் ராதாரவி, 'ஜூனியர் கோச்' நாசர், தேவ் - ஜாகிர் உசேன், பல்லீந்தர் கவுர் சர்மா, நாயகி ரித்திகாவின் குடிகார குப்பத்து அப்பாவாக வரும் காளி வெங்கட், பிபின் உள்ளிட்டவர்களும் பாத்திரமறிந்து பளிச்சிட்டுள்ளனர்.

அருண் மாத்தீஸ்வரனின் வசனங்கள், சதீஷ் சூர்யாவின் படத்தொகுப்பு, சிவக்குமார் விஜயனின் ஒளிப்பதிவு, சந்தோஷ் நாராயணனின் மெலடி, மிரட்டும் இசை. உள்ளிட்ட சிறப்பம்சங்கள் இயக்குநர் சுதா கொங்கராவின் எழுத்து, இயக்கத்திற்கு கூடுதல் பலம் சேர்த்திருக்கின்றன.



குத்துச் சண்டை , அரசியல், தெரிவுக்குழுவின் சபல புத்தி என ஒரு பெண் இயக்குநரால் புதிய களத்தில், இப்படியும் மிரட்டலான படம் எடுக்க முடியும் என காட்சிக்கு காட்சி நிரூபித்திருக்கும் சுதா கொங்கராவிற்கு பாராட்டுதல்கள்.

ஆக மொத்தத்தில், விளையாட்டுத் தொடர்பான படம்என்றாலும் ஆரம்பம் முதல் இறுதி வரை தொஞ்சமும் போரடிக்காத இறுதிச் சுற்று - வெற்றிச் சுற்று!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரோடி பரஞ்சோதியார் சொல்லுறார் கேளுங்கோ...



எல்லோருக்கும் வணக்கம்

நான் ஊரோடி பரஞ்சோதி கதைக்கிறன் கேளுங்கோ. இனிமேல் வாராவாரம் வருவன், வந்து பாருங்கோ... ஏதும் அறிஞ்சத... தெரிஞ்சத... என்ர அனுபவத்த உங்களுக்குச் சொல்லுவன்... சரி.. சரி இண்டைக்கும் ஒரு நல்ல விசயத்தோடை தான் வந்திருக்கிறன்... கண்ணுக்குள்ள எண்ணை விட்ட மாதிரி அவதானமாக கேளுங்கோ....

அந்தக் காலத்தில மாதா, பிதா, குரு, தெய்வம் எண்டு நாங்கள் எவ்வளவு அடக்க ஒடுக்கமாக வாழ்ந்தம். அந்தக்காலம் இப்ப மலையேறிப் போய்ச்சு... அந்தக் காலத்தில் நாங்கள் நாங்கள் எங்கட அப்பர் ஆத்தைக்கு எவ்வளவுக்கு மரியாதை கொடுத்தோம்.... பள்ளிக் கூடம் போறதுக்கு முதல்.... காலங்காத்தால எழும்பி... நடநடவெண்டு நடந்து தோட்டத்துக்குப் போய் பயிர்களுக்கு தண்ணி அள்ளி ஊத்திப் போட்டு... மாட்டுப்பட்டி சாணியெல்லாம் அள்ளி எருவோடு போட்டிட்டு... அதுக்குப் பிறகு தோட்டத்திலை மரவள்ளிக்கிழங்கு பிடுங்கிக் கொண்டு போய், ஆச்சியிட்டைக் கொடுத்திட்டு ஆச்சி அவிச்சுத்தர, கிழங்கைச் சாப்பிட்டுவிட்டு புத்தகத்தைத் தோழில சுமந்து கொண்டு போய் படிச்சனாங்கள் பாருங்கோ...

இந்தப் பழைய பல்லவி ஏனெண்டு நீங்கள் நினைப்பியள்... ஏன் பழைய பல்லவி பாடுகிறேன் எண்டால்... இப்பத்தப் பிள்ளையளுக்கு எங்களைப் போல ஒரு சுமையும் இல்லை. படிக்கிறது தான் அவேயின்ர வேலை... ஆனால் படிக்குதுகள் இல்லை... நாங்கள் படிக்கேக்கை... படிப்பு முடிஞ்சு வீட்டை வந்து கிடைக்கிறதை... சாப்பிட்டு திரும்பவும் தோட்டத்துக்குத் தான் போறது.. விளையாட இல்லை... வேலை செய்ய.... பின்னேரம் மூன்று மணிக்கு தோட்டத்துக்கு போனால் திரும்ப ஏழு மணிக்குத் தான் வீட்டை வந்து சேருவம்... அது வரையும் வேலை தான்.... அண் ணர்...நான்... தம்பி.... தங்கச்சி.... ஆச்சி... அப்பு எல்லோரும் சேர்ந்து சண்டை சச்சரவுகள் இல்லாமல் வேலை செய்வம்.. ம்..ம்.. இப்ப அப்படி ஒற்றுமை இல்லை....அதை ஏன் பேசுவான்!

தாய், பிள்ளை, அண்ணன்,தம்பி, அக்கா, தங்கை எண்டு ஒற்றுமை இல்லாமல் போச்சுது பாருங்கோ... பள்ளிக் கூடம் போட்டு அப்படியே ரியூசனுக் குப் போய் பின்னேரம் விளக்கு வைச்ச பிறகு தான் பிள்ளையள் வீடு திரும்புதுகள்..

அப்ப எங்கை பாசம் வரப்போகுது... வாழ்க்கையே இப்ப இயந்திர மயமாப் போச்சுது... எதுக்கெடுத்தாலும் கனணி,கனணி எண்டு மனிசன்ர மனமும் மரத்துக் கனணி மாதிரி கடினமாக கவந்திட்டது பாருங்கோ... அந்தக் காலத்தில உந்தக் கனணியும் இல்லை ஒரு மாயமும் இல்லை... ஆனா அன்பு, பாசம், மதிப்பு, மரியாதை எல்லாம் இருந்தது... பள்ளிக்கூடம் போகமுதல் அப்பு, ஆச்சியின்ர காலில விழுந்து கும்புடுவோம்... பள்ளிக் கூடத்தில் ஆசிரியரின்ர காலிலை விழுந்து கும்புடுவோம்...மாதா,பிதா, குரு, தெய்வம் இந்த ஆசீர்வாதங்கள் ஒரு மனிசனுக்கு இருந்தால், அதே அவனுக்குச் சிறப்பு. இல்லாவிட்டால் இறப்புத்தான்.. அந்தக்காலத்து ஆக்கள்... மனசுத்தியோடை மற்றாக்களை மதிச்சு நல்ல பழக்கவழக்கங்களோடை வாழ்ந்ததாலை தான் நீடிய ஆயுளோடை நீடுழி காலம் வாழ்ந்திச்சினம். இதை நான் சொல்ல இப்பத்தைய இளசுகள் மூக்கால சிரிப்பினம்.ஏனெண்டால் இப்ப பழக்கவழக்கங்கள் வித்தியாசம் நாங்கள் வீட்டை விட்டு வெளியலை போறதெண்டால்ப் பாருங்கோ.. எங்கை போகிறோம்... எங்கை வாறம்... எண்டு எல்லாம் அப்பு ஆச்சிக்கு சொல்லித்தான் போவோம். வருவோம்... கொஞ்சம் நேரம் செண்டுதோ... போச்சடா போச்சு... காலுக்கு கீழை பட்டை கிளம்பும்... அடியைப்பற்றி சொன்னன்...

இப்ப அப்படி இல்லை ...பிள்ளை எங்கு போகுதெண்டு தாய் தகப்பனுக்குத் தெரியாது...தாய் தகப்பன் எங்கை போகினமெண்டு பிள்ளையளுக்குத் தெரியாது... வீட்டை வந்தால் கண்டு கொள்ள வேண்டியது தான்.. அந்தக் காலத்தில் நாங்களாக உடுப்புப் போட்டுக் கொண்டு பள்ளிக்கூடம் போறது... உந்த ஆட[illegible] இல்லை... [illegible] இல்லை... பொடி நடை தான்..

இப்ப எவ்வளவோ வசதிகளை பிள்ளையளுக்கு செய்து குடுக்கது கள்.. ஏன் என்ர பேரனை நான் தான் ஏத்தி இறக் கினனான்.. முந்தி ஒரு வசதியளும் இல்லாமல் படிச்சுதுதான் என்ரை அண்ணர் வாத்தியாராக வந்தவர்... நான் கொஞ் சம் கோட்டை விட்டதால தோட்டத்திலை நிக்கிறன்.. .ம்.. தோட்டம் எண்டால் என்ன குறைஞ்ச வேலையோ... அதுக்கும் மூளை வேணுமே... எதுக்கும் படிப்பு அத்திவாரம் பாருங்கோ..

இப்ப எவ்வளவு வசதி வாய்ப்புக்கள் இருந்தும் பிள்ளையள் முன்னுக்கு வருகுதில்லைப் பாருங்கோ.. ஏன் தெரியுமே. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு... எண்டா மாதிரி... ம்...ம்... அதுக்குள்ளை சில சின்னதுகளும் கைத்தொலைபேசி கொண்டு திரியுதுகள்... கைத்தொலைபேசி நல்லதுதான்

மனிசனுக்கு அதை அதை அதுக்குப் பாவிச்சால் எல்லோருக்கும் நல்லது.... அதை விட்டுப் போட்டு கிண்ட வெளிக்கிட்டால் படிப்புப் போச்சு... எல்லாம் போச்சு.... பெற்றோரிலையும் சில பிழை இருக்குது பாருங்கோ. “எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே; அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே..” ஓரளவுக் கெண்டாலும் பிள்ளையளை வழிந டத்த வேணும். சுதந்திரம் சுதந்திரம் எண்டு சுத்தித்திரிய விட்டியளோ... கடைசியிலை சுத்தியிருந்து ஒப்பாரி வைக்கவேண்டித்தான் வரும்... பிள்ளையளுக்கு சுதந்திரம் வேணும் தான் அதுக்கா வண்டி அறவே கைவிடக் கூடாது . “ஐந்தில் வளை யாதது ஐம் பதில் வளையாது” இதை யும் மனசில நிறுத்திக் கொள்ள வேணும்...

நீங்கள் எப்படி வளந்தனியள்.. பிள்ளையளை எப்படி வளர்க்க வேணுமெண்டு... உங்களுக்குள்ளை நீங்கள் முடிவு எடுக்க வேணும்... இல்லையோ அதோ கதிதான்.. கண்டிக்கிற இடத்தில் கண்டிக்க வேணும்...தட்டிக்குடுக்கிற இட த்தில் தட்டிக் கொடுக்க வேணும்... என்ன நான் சொல்லுறது விளங்குதே...?


அதே நேரத்தில பிள்ளை கேக்குதெண்டு போன், மோட்டச்சைக்கிள், கணினி, இப்படி அப்படி எண்டு வாங்கிக் குடுத்துப் போட்டு நீட்டுக்கு விட்டியளோ... கடைசியில ... கவலைப்படுவியள்...

வசதியளை செய்யுங்கோ. அதாலை பிள்ளையளுக்கு வலிவராத படிக்கு பார்த்துக்கொள்ளுங்கோ... இதை நான் ஏன் சொல்லுறன் தெரியுமோ... கன இடத்திலை கனஅலுவல்களை கண்டு கழிச்சிருக்கிறன்...தூர இடத்துப் பள்ளிக்கூடத்துக்குப் படிக்கப் போகுதெண்டு ‘கான்போன்’ எடுத்துக் குடுத்தினம் ஒரு பிள்ளைக்கு... ஆறு மாதம் கழிச்சு அது உயர்தரப் பரீட்சை எடுக்கேலை மாப்பிள்ளை எடுத்திட்டுது... அதுக்கு பிறகு அழுது குளறினா தாய்.... ம்....ம்... சிலபேர் தான் தங்கடை பிள்ளையளை கெடுக்கிறது. சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி... நான் எப்பவும் ஆரையும் குத்திக்காட்ட வேணுமெண்டு செல்லேல்லை. தட்டிக் கொடுங்கோ. தட்டிக் கெடுத்துப் போடாதேங்கோ எண்டு தான் வாய் கூசாமல் 'சொல்லுறன்... ஏனெண்டால் நான் கெட்டாலும் மற்றவன் வாழ வேண்டும் எண்டது தான் என்ரை ஆசை ...

இப்ப எத்தனை பிள்ளையள் கோயில் குளத்துக்குப் போகுதுகள்....இறைவனை வணங்குதுகள்.... கல்வியைத் தேடச் சொல்லி பிள்ளையளுக்கு எத்தனை வசதியளைச் செய்து குடுத்திருக்கிறியள்.

எல்லாம் மனிசனுக்கு தேவை தான்...கல்வி, செல்வம், வீரம் மூண்டும் பிள்ளையளுக்கு இருக்க வேணும்.. அப்ப தான் அவனுக்கு வாழ்க்கையில முன்னேற சுலபமா இருக்கும்... கொஞ்ச நேரமெண்டாலும் பிள்ளையயோடை நேரத்தை செலவு செய்யுங்கோ... நல்லதைச் சொல்லிக் கொடுங்கோ... சமூகத்தில் பிள்ளைகளும் தலை நிமிர்ந்து வாழ வேணும்... குடும்பம் ஒரு கோவில்... நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்.... அங்கை தான் பிள்ளை முதல்முதலில் நல்லா படிக்க வேணும்... இல்லை எண்டால் எங்கை படிச்சாலும் சரிவராது....

நாற்றுமேடையில் எப்படி செடியளை பராமரிக்கிறமோ அதே மாதிரி பிள்ளையளை பராமரிக்க வேணும்.... கொழுகொம்பா பெற்றோர் இருக்க வேணும்... நானும் பல பிள்ளையளை பெத்த மகாரராசன் எண்டதால அனுபவம் எனக்கிருக்கு.... நான் ஒண்டும் அறிவுரை சொல்லவரேல்லை அறிஞ்சதை தெரிஞ்சதை சொல்லுறன். அவ்வளவுதான். அப்ப நான் வரப்போறன். அடுத்தமுறை ஒரு விசயத்தோடை வரட்டே....



- முத்தமிழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்மசொப்பனம் -60

அவருக்கு சாரியாவை நன்றாகத் தெரிந்திருந்தது. ஒரு வேளை தன்னைக் கண்டு பிடித்து விடுவாரோ என்று நினைத்துக் கொண்டார். காஸ்ட்ரோ சமீபமாக நிறைய அலைந்திருந்தார் என்பதால் மெலிந்து போயிருந்த தன்னை அவர் கண்டு பிடிக்க முடியாது என்றும் நினைத்துக் கொண்டார். பேசாமல் வண்டியில் ஏறி அமர்ந்தார்.

முன் வரிசையில் காஸ்ட்ரோவும் அவருக்கு அருகே சாரியாவும் அமர்ந்திருந்தனர்.

காஸ்ட்ரோவுக்கு உறுத்தியது. ' நான் உண்மையைச் சொல்லி விடுகிறேன். நீங்கள் தேடிக் கொண்டிருக்கும் குற்றவாளி நான் தான் என்றார்.

சாரியா புன்னகைத்தார். "எனக்குத் தெரியும் ஃபிடெல்" காஸ்ட்ரோவுக்கு ஆச்சரியம். தெரிந்திருந்தும் எதற்காக என்னை விட்டு வைத்தீர்கள்? உங்கள் ஆள்கள் கொல்லவரும் போது ஏன் தடுத்தீர்கள்?'

'எதற்காக நான் உங்களைக் கொல்ல வேண்டும்? தவறு செய்தது நீங்கள் அல்ல. இந்த அரசாங்கம்' என்றார் சாரியா.

காஸ்ட்ரோ அவரை விடவில்லை.'என்னைக் கொல்ல மறுத்தீர்கள் என்ற குற்றத்துக்காக உங்களைக் கொன்று விட்டால்?'

அதற்கும் சிரித்தார் சாரியா. 'நான் தயார்!'

'காஸ்ட்ரோ இறந்து விட்டார்' எனும் செய்தி காட்டுத்தீ போல் ஹாவானாவில் பரவிக்கொண்டிருந்தது. போராட்டத்தின் போது காஸ்ட்ரோ சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. ஆனால் பொதுமக்கள் இந்தச் செய்தியை நம்பிவிடவில்லை அவர்கள் சந்தேகித்தது சரி என்பது போல் பெரஸ் ஹவானா விரைந்து சென்று தேவாலயத்தில் கூட்டத்தைக் கூட்டினார். காஸ்ட்ரோ இன்னமும் இறக்கவில்லை என்றும், கைது மட்டுமே செய்யப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

அதே நாள், அதாவது ஒகஸ்ட் இரண்டாம் திகதி பாடிஸ்டா சாண்டியாகோவுக்கு விரைந்து இராணுவத்தினரைச் சந்தித்து வாழ்த்தினார். துணிச்சலாகப் போராடி கலகக்காரர்களை ஒடுக்கிய ராணுவ வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து மகிழ்ந்தார்.


காஸ்ட்ரோவை விசாரிக்க சாமியானோ என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் ஒரு இராணுவத்தளபதி. காஸ்ட்ரோவிடம் பேசி எப்படியாவது உண்மையைக் கறந்து விட வேண்டும் என்று அவர் விரும்பினார். ஒன்றன் பின் ஒன்றாக பல கேள்விகளை வீசினார். காஸ்ட்ரோ பேசத் தொடங்கினார். மொன் காடாத் தாக்குதலுக்கு திட்டம் தீட்டியது தொடங்கி தன்னுடைய சகாக்கள் யார், எதற்காக இந்தப் போராட்டம் என்று அனைத்து விபரங்களையும் பயப்படாமல் சொல்லி முடித்தார். சாமியானோ காஸ்ட்ரோவின் வாக்குமூலத்தை வேறுவகையில் புரிந்து கொண்டார். ஏதோ சில பிரச்சினையின் காரணமாக, காஸ்ட்ரோ தனது புரட்சிக்காரர்களின் பெயர்ப்பட்டியலை வாசிக்கிறான் போலும், அவர்களை மாட்டிவிடச் சம்பாதிக்கிறான் போலும் என்று நினைத்துக் கொண்டார்.

சாமியானோவுக்கு திடீரென்று ஓர் அச்சம் .' இது நான் கொடுத்த வாக்கு மூலம் அல்ல' என்று காஸ்ட்ரோ பின்னர் மறுத்து விட்டால் என்ன செய்வது ?' ஒரே வழி தான் அவருக்குத் தெரிந்திருந்தது. அந்த வழி இது தான். தனிமையில் காஸ்ட்ரோ ஆயிரம் பேசினாலும் அது ஓர் ஆதாரமாக மாற முடியாது. எனவே அரசாங்கம் பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும் படி காஸ்ட்ரோ தனது தவறை ஒப்புக் கொண்டால்தான் தனக்குப் பெருமை என்று அவர் நினைத்துக் கொண்டார். பத்திரிகைகளுக்குத் தகவல் தெரிவித்து நிருபர்களை வரவழைத்தார். காஸ்ட்ரோ தனது தவறுகளை ஒப்புக் கொள்கிறார். வாருங்கள் என்று கூவினார் சாமியானோ. பத்திரிகையாளர்களைச் சந்தித்தார் காஸ்ட்ரோ. வழக்கம் போல் பேச்சுத்திறமை தான் இம்முறையும் அவருக்குக் கை கொடுத்தது. எங்களது போராட்டம் க்யூபாவுக்காக. சர்வதிகார ஆட்சியை முடிவு கட்டுவதற்காக. இந்தப் போராட்டத்தில் நாங்கள் சாக நேரிட்டாலும் பரவாயில்லை. எங்களுக்குத் தேவை. க்யூபாவின் சுதந்திரம். சுதந்திரம் மட்டுமே!'

காஸ்ட்ரோ மிகத்தெளிவாக , மக்களின் மனதில் பதியும் படி தனது எண்ணங்களையும் வெளிப்படுத்தினார். பத்திரிகைகள் காஸ்ட்ரோவின் வாக்குமூலத்தை அப்படியே வெளியிட்டன. காஸ்ட்ரோவைப் பேசவைத்தது போதாதென்று அவரோடு சேர்ந்து ஒரு புகைப்படத்தையும் எடுத்துக் கொண்டார் சாமியானோ. அதுவும் எப்படி? காஸ்ட்ரோவை நடுவே நிற்க வைத்து விட்டார். ஒரு புறம் சாமியானோ. மற்றொருபுறம் உதவித் தளபதி ஒருவர். சுவரில் மார்த்தியின் பெரிய படம். பார்த்தவர்கள் ஒரு கணம் குழம்பிப் போனார்கள். காஸ்ட்ரோ கைது செய்யப்பட்டிருக்கிறாரா அல்லது இரண்டு ராணுவத் தளபதிகளால் வரவேற்கப்பட்டிருக்கிறாரா? சாமியானோ நினைத்தது ஒன்று, நடந்தது வேறொன்று.



## சொற்சிலம்பம் போட்டி இல. 710



அனுப்புபவர் பெயர்:........................................................

விலாசம்:.,........................................................

............................................................................

கையொப்பம்:........................................................

### மேலிருந்து கீழ்

1.தலைவன்.
2.இலக்குமி.
3.மடல்.
4.மாணவர் கடைமை இது.
5.இது கொண்டு புலி விரட்டினாளாமே புறநானூற்றுப் பெண்.
6.குத்து விழுவது இப்படி.
8.ஓர் இலக்கம்.
10.உள்ளூராட்சி அமைப்பு ஒன்று.
12.இது கன்னங்கரேல் என இருக்கும்.
14.இராமன் மறைந்திருந்து அம்பெய்து கொன்றது இவனை.
15.பிறந்த சந்ததி.
16.(பிரதம) விருந்தினன்.
17.தரு.
19.புதிய.

### இடமிருந்து வலம்

1. பத்துப் பாடல் கொண்ட திரட்டு.
4.ஒரு மரம் .
7.களவு செய்யும் மங்கை.
8.மணம்.
9.ஆங்கிலேயர்,ஆட்சியில் இதுவும் நடந்தது.
10.விரலில் உள்ளது.
11.இது போனால் சொல்லுப் போகும்.
13.இது போதை தரும்.
14.விவாதம்.
15.சிஷ்யனுக்கு வழிகாட்டி.
16.ஆணுமல்ல, பெண்ணுமல்ல.
17.உணவின் கழிவு.
18.வீதிகள் சந்திக்கும் இடம்.
19.உணர்வுகளைக் கடத்துவது.
20.சடப்பொருளின் வடிவங்களுள் ஒன்று.

## சொற்சிலம்பம் போட்டி இல. 710

சொற்சிலம்பம் போட்டி 710ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி 17ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2016 பெப்ரவரி 24 மற்றும் மார்ச் 02 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## போட்டி இல. 707இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | தா. ஸ்ரீதரன், சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். |
| 2 ஆம் பரிசு | ஸ்ரீ. லக் ஷன், தரம் 9 D, யாழ். மத்திய கல்லூரி. |
| 3 ஆம் பரிசு | க. கமலேஸ்வரன் , இல 791, கட்சன் வீதி வட்டக்கட்சி, கிளிநொச்சி. |

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் அலுவலக நேரத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 492 7419 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 708க்கான விடைகள்

### மேலிருந்து கீழ்

1.பிரசாதம்.
2.மாதர்.
3.தரித்திரம்.
4. சாயம்.
5. மைல்.
7. கயமை.
9.மலை.
10.திறல்.
13.குருவிச்சை.
14.குடும்பி.
15.கணை.
16.சுகம்.
17.துலா.
18.யாது.
19.பகை.

### இடமிருந்து வலம்

1.பிரமாதம்.
4.சாமை.
6.தரி.
7.கயல்.
8.சாமர்த்தியம்.
11.தலை.
14.குரல்.
15.கரு.
16.சுடும்.
17.துணைவி.
18.யாகம்.
19.பலா.
20.தும்பிக்கை.
21.பகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# தெற்கின் அரசியல் திரைக்குப் பின்னால் குட்டையைக் கலக்கிவிடும் போக்கு...!

சோர்வடையாத விக்கிரமாதித்தன் போல குடைச்சல் கொடுப்பவர்கள் புதிய கோணத்தில் சிந்திக்கிறார்கள். மைத்திரி ஜனாதிபதியானதும் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மஹிந்தவை பிரதமராக்க முயற்சி செய்தார்கள். இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இருந்துகொண்டு தமது காரியத்தைச் சாதிக்க மீண்டும் மீண்டும் முயற்சி செய்கிறார்கள். நல்லிணக்க அரசுக்கு எதிரானவர்களில் சிலர் மெதுமெதுவாக அரசின் பக்கம் சாய்கிறார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் குழப்பம் செய்பவர்களை கட்சித்தலைவரான ஜனாதிபதி மைத்திரி களை எடுக்கிறார். இருந்த போதிலும் சிலர் பூச்சாண்டி காட்டுவதை நிறுத்தவில்லை. மஹிந்த ஜனாதிபதியாக இருந்தபோது பல அரசியல் கட்சிகள் இரண்டாகின. எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் பதவி என்ற எலும்பைக் கண்டதும் தமது கொள்கையை மறந்து அரசாங்கத்துக்குத் துதிபாடினார். ஆட்சி மாறினதும் சிலர் செல்லாக் காசாகினர். அரசியலில் இதெல்லாம் சகஜம் என உணர்ந்தவர்கள் கட்சிமாறி தமது அரசியல் இருப்பை உறுதிப்படுத்தினர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மைத்திரியும், மஹிந்தவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போதே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இரண்டாகி விட்டது. அரசியல் கட்சிகள் பலவற்றை உடைத்து இரண்டாக்கியவரின் கட்சி, இரண்டாகியதால் ஜனாதிபதித் தேர்தலில் அவர் தோல்வியடைந்தார். மஹிந்த என்ற அரசியல் விருட்சத்தின் நிழலில் சுகம் கண்டவர்கள் அந்த நிழலில் இருந்து வெளிவரப் பின்னடிக்கின்றனர். தமது அரசியல் இருப்பை வெளிக்காட்டுவதற்காக அவ்வப்போது அவர்கள் அறிக்கைகளை வெளியிட்டு திருப்தியடைகின்றனர். நல்லிணக்க அரசாங்கத்தில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மாற்று எதிரணியாகச் செயற்படுகின்றனர். முன்னாள் ஜனாதிபதியை முதன்மைப்படுத்துவதே அவர்களின் நோக்கம் எனலாம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மைத்திரியும், மஹிந்தவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகி விட்டது. அரசியல் கட்சிகள் பலவற்றை உடைத்து இரண்டாக்கியவரின் கட்சி, இரண்டாகியதால் ஜனாதிபதித் தேர்தலில் அவர் தோல்வியடைந்தார். மஹிந்த என்ற அரசியல் விருட்சத்தின் நிழலில் சுகம் கண்டவர்கள் அந்த நிழலில் இருந்து வெளிவரப் பின்னடிக்கின்றனர். தமது அரசியல் இருப்பை வெளிக்காட்டுவதற்காக அவ்வப்போது அவர்கள் அறிக்கைகளை வெளியிட்டு திருப்தியடைகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஜனாதிபதி மைத்திரியிடம் இருந்து கைப்பற்ற முடியாது எனத் திட்டவட்டமாக உணர்ந்தவர்கள் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பது பற்றி சிந்திக்கிறார்கள். அக்கட்சிக்கு மஹிந்தவைத் தலைவராக்க முயற்சி செய்கிறார்கள். ஆட்சியைப் பிடிக்க முடியாத கட்சிக்குத் தலைவராக மஹிந்த விரும்பவில்லை. ஆகையினால் அவர்களது பார்வை கோத்தபாயவை நோக்கி திரும்பி உள்ளது. புதிய அரசியல் கட்சி ஒன்றின் தோற்றம் பற்றி கோத்தபாய கருத்துத் தெரிவித்திருப்பதால் அவரின் தலைமையில் புதிய கட்சி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜாதிக ஹெல உறுமய,பொது பலசேன ஆகியவற்றின் அட்டகாசம் கடந்த ஆட்சிக் காலத்தில் அதிகமாக இருந்தது. இப்போது அக்கட்சிகள் அதிரடியாகச் செயற்பட முடியாத நிலை உள்ளது. தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெற முடியாத அரசியல் கட்சிகளும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் அரசியல் தலைமையை விரும்புகின்றனர். தேசிய சுதந்திர முன்னணி,மித்துரு ஜாதிக ஹெல உறுமய, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி ஆகியன ஒன்றிணைந்து புதிய கட்சியை ஆரம்பிக்கப் போவதாக தகவல் வெளியாகி உள்ளது.

இன்றைய அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் இக்கட்சியில் இணைவார்கள்.

ஜனாதிபதி மைத்திரியின் தலைமையை விரும்பாத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் அளிக்கப்படமாட்டாது. ஆகையினால் தமது அரசியல் இருப்பை உறுதிப்படுத்துவதற்காக புதிய கட்சியின் தேவை ஒன்று அவர்களுக்கு உண்டு.



ஜனாதிபதி மைத்திரியையும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவையும் ஒன்றிணைக்க சிலர் முயற்சி செய்தார்கள். அந்த முயற்சி தோல்வியடைந்தது. நாடாளுமன்றத் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் அவர்களது ஆதரவாளர்களும் போட்டியிட ஜனாதிபதி மைத்திரி அனுமதி வாழங்கினார். எனினும் உள்ளூராட்சித் தேர்தலில் கட்சிக்கு விசுவாசமாக இல்லாதவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தயவு இல்லாது தேர்தலில் வெற்றி பெற முடியாது எனத் தெரிந்து கொண்ட ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என தம்மை அழைத்துக் கொள்பவர்கள், சிங்கள இனம் என்ற கொதி நிலையில் தேர்தலில் போட்டியிட முயற்சிக்கிறார்கள்.

இதன் ஊர் அங்கம் தான் "சிங்ஹலே" என்ற கோஷம் என்ற சந்தேகம் உள்ளது. இனவாதத்தைத் தூண்டி தேர்தல் வெற்றியை அனுபவித்தவர்கள் பின்னாளில் விடுதலைப் புலியைப் பற்றிய கிலியை விதைத்து தேர்தலில் வெற்றி பெற்றார்கள். புலிகளை அழித்த அடையாளம் நிரந்தர வெற்றியைக் கொடுக்கும் என்ற கனவு பொய்த்துப் போனது: தேர்தல் வெற்றிக்காக எதாவது ஒன்றைச் செய்தாக வேண்டும் என்ற நிலையில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உள்ளது.

தமிழ் முஸ்லிம் வாக்குகள் இல்லாது நாடாளு மன்றத்தேர்தலில் வெற்றிபெற முடியாது. ஆனால் உள்ளூராட்சித் தேர்தலில் சிங்கள இனவாத வாக்குகளால் வெற்றி பெற முடியும் என நினைப்பவர்கள் புதிய அரசியல் கட்சியைப்பற்றி சிந்திக்கிறார்கள்.

புதிய அரசியல் கட்சியின் தோற்றத்துக்கு மஹிந்த ஆதரவு வழங்கவில்லை என்றாலும், அவரது ஆசி உள்ளது என்பது இரகசியமானதல்ல. விகாரைகளுக்கு வணங்கச் செல்லும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அங்கெல்லாம் அரசியல் பேசுகிறார். அவரது அரசியல் பேச்சுகள் அனைத்தும் நல்லிணக்க அரசாங்கத்துக்கு எதிரானதாகவே உள்ளன. புதிய கட்சியின் தோற்றப்பாட்டை வலியுறுத்துவதாக அவரது பேச்சுக்கள் அமைகின்றன.

கிராமங்களில் உள்ள சிங்கள மக்கள் இன்னமும் மஹிந்தவின் ஆதரவாளர்களாகவே உள்ளனர். தமது மீட்பராக அவரை நோக்குகின்றனர். இனவாதத்தில் குளிர் காய்பவர்கள் மீண்டும் மேலெழ முயற்சி செய்கின்றனர். இவர்களைச் சமாளிக்கும் பாரிய பொறுப்பு ஜனாதிபதி மைத்திரிக்கு உள்ளது. கொஞ்சம் அசந்தால் உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் கோல் உயர்ந்து விடும். இத்தகைய ஒரு பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ளவர்களையும் ஒரே நேரத்தில் சமாளிக்க வேண்டிய இக்கட்டான நிலையில் ஜனாதிபதி உள்ளார்.

- வானதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தோஷ் நாராயண
# சந்தோஷத்தி



2012 ஆம் ஆண்டு வெளியான அட்டகத்தி படம் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானவர் சந்தோஷ்நாராயணன். தொடர்ந்து பட்சா, சூதுகவ்வும், குக்கூ, ஜிகர்தண்டா, மெட்ராஸ், 36வயதினிலே என்று வரிசையாக வெற்றிப்படங்களில் அவர் இருந்தார்.

அதன்விளைவு 2016 இல் அவருக்குப் பத்துப்படங்கள் இருக்கின்றன. எல்லாமே கவனிக்கத்தக்க படங்களாக இருக்கின்றன. இதனால் சந்தோஷ் நாராயணன் மிகவும் சந்தோஷத்தில் இருக்கிறார்.

# ஸ்ருதியின் பிறந்தநாள்

ஸ்ருதிஹாசன் தன்னுடைய பிறந்தநாள் விழாவை இன்று கண்பார்வையற்ற குழந்தைகளுடன் கொண்டாடினார்.

கமல்ஹாசனின் மகளான ஸ்ருதி பாடகியாக அறிமுகமாகி தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகையாக வலம் வருகிறார். இவரின் பிறந்தநாளையொட்டி சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள லிட்டில் பிளவர் கண்பார்வையற்றோர் குழந்தைகள் காப்பகத்தில் உள்ள குழந்தைகளுடன் சேர்ந்து கொண்டாடினார்.ஏராளமான குழந்தைகளுடன் கேக் வெட்டியும், அத்துடன் மதிய உணவும், பரிசுப் பொருள்களும் வழங்கினார். காப்பகத்தில் உள்ள அனைத்து குழந்தைகளும் ஸ்ருதிக்கு பிறந்த நாள் வாழ்த்துகள் கூறினர்.

# டுவிட்டரில் இ
# கமல்

ஜனவரி 26 ஆம்திகதி டுவிட்
இணைந்தார் கமல். இன்றுவரை அ
அறுபதாயிரத்துக்கும் மேற்பட்டோர்
பின்தொடருகின்றனர். தொடங்கிய
நாளிலிருந்து ஓரிரு பதிவுகளை மட்
போட்டிருக்கிறார் கமல்.

அவருடைய மகளு நடிகையா
ஸ்ருதிஹாசன் பிறந்த நாளையொட்டி
அவருக்கு வாழ்த்துச் சொல்லி ஒரு டு
போட்டிருந்தார். அதைப்போட்ட ஒரு
மணிநேரத்திலேயே இன்னொரு டுவிட்
போட்டிருக்கிறார் அதில், என் டிவிட்டில்
தமிழில்லையென மனங் கோணும்
அன்பர் கட்கு, இத்தோழி
என் தோள் மிஞ்சப் பல
காரணங்கள், அக்
காலணியின் உயரமும்
சேரும் என்று போட்டிருக்கிறார்
மகளுக்கு அவர் சொன்ன
பிறந்தநாள் வாழ்த்தின்
தமிழாக்கம்தான்

# சிக்கலில் அஜித்தின் இயக்குநர்



அஜித்தை வைத்து வீரம், வேதாளம் ஆகிய படங்களை இயக்கிய சிவா அவருடைய அடுத்த படத்தையும் இயக்கப்போகிறார் என்று சொல்லப்படுகிறது. அஜித் இப்போது ஓய்வில் இருக்கிறார். ஓய்வு முடிந்த வுடன்சிவா இயக்கும் படத்தில் நடிக்கவிருக்கிறார் அந்தப்படத்தை சத்ய ஜோதி பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கவிருக்கிறது என்றும் சொல்கிறார்கள். ஆனால் அதில் தற்போது ஒரு சிக்கல் ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லப் படுகிறது.

இயக்குநர் சிவா, தமிழில் முதல்படம் இயக்க வந்தபோது அந்தப்பட நிறுவனத்துக்கு இன்னொரு படம் இயக்குவதாக ஒப்புக் கொண்டு முன்தொகையும் வாங்கியிருந்தாராம் சிவா. ஆனால் தொடர்ந்து அஜித்தோடு பணியாற்றுவதால் அவர் சொல்கிற தயாரிப்பாளர்களுக்கே படம் பண்ணும் நிலை அமைந்து விட்டது. அடுத்த படமும் வேறு தயாரிப்பாளருக்கே இயக்குகிறார் என்ற செய்தி வந்தவுடன், எங்கள் நிறுவனத்தில் போட்ட ஒப்பந்தத்தை மதிக்காமல் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறீர்களே என்று தயாரிப்பாளர் தரப்பலிருந்து கேட்டிருக்கிறார்கள்.

இந்தவிசயம் தெரிந்து இப்போதைய தயாரிப்பு நிறுவனம் அந்தச் சிக்கலைச் சரிசெய்துவிட்டு வாருங்கள் என்று இயக்குநரிடம் சொல்லியிருக்கிறார் களாம். அதனால் முதல்படத் தயாரிப்பாளரோடு பேச்சுவார்த்தையில் இருக்கிறாராம் இயக்குநர்.

# அசினி

நடிகை அசினுக்கும், தெ
திருமணம் நடைபெற்றது. கிறி
திரையுலகைச் சேர்ந்த ஏராள
இதைத்தொடர்ந்து, மும்
என்று அவரது கணவர் ராகுல்
போது எடுத்த ஒரு புகைப் பட
அதில் வெளியிட்டுள்
பிடித்திருக்கிறே
செய்துள்ள

# சர்ச்சையில் கதகளி



பாண்டிராஜ் இயக்கத்தில் விஷால் நடித்த கதகளி திரைப் படம் சர்ச்சைக்கு ஆளாகியிருக்கிறது. இது பொங்கல் விழாவின் போது வெளியானது. இந்தப் படத்தில் சில சமூகத்தைச் சேர்ந்த மக்களையும் இழிவுபடுத்துவதாகவும்,புண்படுத்துவதாகவும், அவமதிப்பதாகவும் உள்ளன. எனவே இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் மனுச்செய்யப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து விஷால் தன்னிச்சையாகவே முன்வந்து திரைப்பட தணிக்கை அதிகாரிகளின் ஒப்புதலுடன் வில்லன் விஷாலிடம் பேசும் 20 நொடி நீளமுள்ள அந்தக் காட்சி திரையரங்கில் நீக்கப்பட்டு விட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்களத்தில் ஒரு பூ திரைப்படத்துக்கு வழக்கு

போர்க் களத்தில் ஒரு பூ என்ற திரைப்படத்துக்குத் தடை கோரி படத்தின் இயக்குநருக்கு நோட்டீஸ் அனுப்ப சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இலங்கையில் நடைபெற்ற போரை மையமாக வைத்து, கே.கணேசன் என்பவர் போர்க் களத்தில் ஒரு பூ என்ற பெயரில் திரைப்படத்தை இயக்கியுள்ளார். அந்தப் படத்தை பொதுமக்களுக்கு திரையிட்டுக் காட்ட அனுமதிக்க முடியாது என தணிக்கைக் குழு கடந்த ஆண்டு உத்தரவிட்டது.

இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில், அந்தத் திரைப்படத்தின் இயக்குநர், தயாரிப்பாளர் ஆகியோர் வழக்குத் தொடுத்தனர். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில், இந்த வழக்கில் தங்களையும் ஒரு மனுதாரராகச் சேர்த்து விசாரிக்க வேண்டும் என்றும், படத்துக்குத் தடை விதிக்க வேண்டும் என்று கோரியும் இசைப்பிரியாவின் தாயார், மூத்த சகோதரி ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர்.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிபதி கே.கே.சசிதரன், மனுவுக்கு பதிலளிக்கும்படி அந்தப் படத்தின் இயக்குநர், தயாரிப்பாளர் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.

## ணன்
## த்தில்



## இணைந்தார்
## ல்

திகதி டுவிட்டரில்
றுவரை அவரை
மற்பட்டோர்
நாடங்கிய
களை மட்டுமே

டிகையாக
ளயொட்டி
ல்லி ஒரு டுவிட்
பாட்ட ஒரு
ளாரு டுவிட்
ர டிவீட் டில்
ணும்
ழி

க்கிறார்





## ரின் திருமணம்

னுக்கும், தொழில் அதிபர் ராகுல் சர்மாவுக்கும் கடந்த 19ஆம் திகதி டெல்லியில்
ற்றது. கிறிஸ்தவ மற்றும் இந்து முறைப்படி நடந்த இந்தத் திருமண விழாவில்,
ந்த ஏராளமானோர் பங்கேற்றனர்.
ந்து, மும்பையில் வரவேற்பு நடந்தது. இந்த நிலையில், அசின் தான் என் உலகம்
னவர் ராகுல் சர்மா டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார். மேலும், திருமணத்தின்
புகைப் படத்தையும்
வளியிட்டுள்ள அவர், அத்துடன் என் உலகத்தை கரங்களால்
த்திருக்கிறேன் என்றும் புன்னகை தவழ அதில் பதிவு
செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓர் இளம் பெண்ணின் வாழ்வில் அடுத்தடுத்து வீழ்ந்த இடிகள்

**என்**னுடைய அறியாமையினால் நான் எச்.வி தொற்றுக்குள்ளானேன். ஆயினும், நான் எச்.வி தொற்றுக்குட்பட்டவள் என்று வெளியில் கூறினால் என்னை எல்லோரும் வெறுத்து விடுவார்களோ, என்ற பயத்தில் என் உறவுகள் யாரிடமும் இது தொடர்பாக கூறி ஆறுதல் பெற நான் விரும்பவில்லை.

பெண்களிடம் திருமண கனவுகளுக்கு பஞ்சமிருக்காது. ஆயிரம் ஆசைகளையும் கனவுகளையும் மனதில் சுமந்தவாறு தம் திருமண நாளுக்காக காத்திருப்பார்கள்.

நானும் அவ்வாறே என் திருமண வாழ்க்கை தொடர்பாக பல்வேறு கனவுகள் கண்டேன். ஆனால், என்னுடைய கனவுகள் அனைத்துமே கணப்பொழுதில் கரைந்து போய்விட்டன.

இன்று நான் ஏன் திருமணம் செய்து கொண்டேன் ? என்று என்னை நானே பலமுறை கேள்வி கேட்டுக்கொள்கின்றேன். என்னுடைய திருமண வாழ்க்கை என் உறவுகளை என்னிடமிருந்து தூரத் தள்ளியது. இன்று உரிமைகொள்ள ஆயிரம் உறவுகள் இருந்த போதும் உள்ளத்தைப் புரிந்துகொண்டு உதவி செய்ய எனக்கு யாருமில்லை. நானும் என் மகனும் தனித்தே வாழ்கின்றோம்.

இது எச்..வி. தொற்றுக்குட்பட்ட நிலையில் கண்டி தொற்றுத் நோய்த் தடுப்பு பிரிவில் பல வருடங்களாக சிகிச்சை பெற்று வரும் ரிஹானாவின் உள்ளக்குமுறலாகும் (பெயர் மாற்றப்பட்டுள்ளது)

ரிஹானா தொடர்ந்து தமது கடந்த காலம் தொடர்பாக எம்முடன் பகிர்ந்து கொண்ட போது,

என்னுடைய பிறப்பிடம் திருகோணமலை. நான் தாய், தந்தை , இரு சகோதரிகள், இரு சகோதரர்கள் என்ற குடும்பத்தில் மூத்தவள்.

தந்தை விவசாயத்தை தொழிலாக செய்து வந்தார். கஷ்டப்பட்டாலும் எங்களுடைய குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்கவில்லை.

எனினும், 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற ஆழிப் பேரலை அனர்த்தம் குருவிக்கூடாய் இருந்த எம் குடும்பத்தை சிதைத்தது.

நானும் எனது சகோதரர்களில் ஒருவரும், சகோதரிகளில் ஒருவரும் மத்திய மலைநாட்டு பகுதிகளை நோக்கி சுற்றுலா சென்றிருக்கையில், என் தாய், தந்தை, மற்றைய சகோதரர், சகோதரி ஆகியோரை சுனாமி பேரலை அள்ளிச் சென்றது.

இறுதியில் அவர்களின் உடல்களை கூட எங்களால் பார்க்க முடியாமல் போனது. பல மாதங்கள் கழித்தே நாங்கள் மீண்டும் திருகோணமலைக்கு வந்தோம்.

தாய், தந்தை, உடன்பிறந்த உறவுகளை இழந்த சோகம் ஒரு பக்கம் என்னை வாட்ட, மறுபக்கம் என்னோடு சுற்றுலா வந்த சகோதரனையும் சகோதரியையும் வளர்த்து ஆளாக்கும் மிக பெரிய பொறுப்பும் என் மீது சுமத்தப்பட்டது.

அன்றைய நிலையில் எங்களுக்கு உதவி செய்ய எங்கள் தாய், தந்தையின் சொந்தங்கள் யாரும் முன்வரவில்லை. ஒரு பெரியம்மா (ரிஹானாவின் தாயின் மூத்த சகோதரி) மட்டும் தன்னால் முடிந்த சிறிய சிறிய உதவிகளை எங்களுக்கு செய்தார்.

எனவே, ஏதாவது ஒரு தொழிலைச் செய்து அவர்கள் இருவரையும் பார்த்துக்கொள்ள வேண்டிய தேவை எனக்கிருந்தது. அப்போது நானும் திருமணம் செய்துகொள்ளும் வயதில் இருந்தேன்.

எனக்குள்ளும் திருமணம் தொடர்பாக பல்வேறு கனவுகள் இருந்தன. எனினும், அன்றைய நிலையில் அதைப் பற்றி எல்லாம் சிந்திக்கும் மனநிலையில் நான் இருக்கவில்லை.

என்னுடைய ஆசைகள், கனவுகளே அனைத்தையும் எனக்குள்ளேயே போட்டு புதைத்து விட்டேன். எப்படியாவது எனது தம்பி, தங்கை இருவருக்கும் சிறப்பான ஒரு எதிர்காலத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பது மட்டுமே என் சிந்தையிலிருந்தது.

எனவே, நான் தொழில் தேட ஆரம்பித்தேன். எனினும் நான் பாடசாலை கல்வியை முறையாக பூர்த்திசெய்ய தவறியதால் எனக்கு தொழிலொன்றை பெற்றுக்கொள்வதும் சிரமமாகவிருந்தது. இதன்போது ஊரிலுள்ள வைத்தியர் ஒருவர் எனக்கு உதவியாகவிருந்தார்.

அவர் தன்னுடைய வீட்டுடன் சேர்த்து நடாத்திவந்த காரியாலயத்தில் அவருக்கு உதவியாக என்னை வேலைக்கு சேர்த்தார்.

அங்கு வேலை செய்து கிடைக்கும் பணத்தில் அவர்கள் இருவரையும் என்னால் முடிந்த அளவு எந்தவித குறையுமில்லாது பார்த்துக்கொண்டேன்.

எனது தங்கை படிக்கும் வயதிலேயே அவள் விருப்பத்துக்கு திருமணம் செய்துகொண்டாள். அதன்பின் தம்பியும் பாடசாலை கல்வியை பூர்த்திசெய்து ஒரு சில வருடங்களிலேயே திருமணம் செய்துகொண்டான்.

இந்நிலையில் அவர்கள் இருவரும் இரு வேறு கூடுகளை நோக்கிச்செல்ல நான் தனிமரமானேன்.

அதற்கு பிறகு எனக்கு திருமணம், குடும்பம் என்பவை தொடர்பாக எல்லாம் நம்பிக்கையிருக்கவில்லை. வாழும் வரை சகோதர சகோதரிகளுடனும், அவர்களுடைய பிள்ளைகளுடனும் இருந்துவிடலாம் என்று இருந்தேன். ஆயினும் தம்பியின் மனைவி பல சமயங்களில் என்னை ஓரம் கட்டுவதை நான் அவதானித்தேன்.

இந்த நிலையில், தம்பியும் தொழில் நிமித்தம் வெளிநாட்டுக்குப் பயணமானான். எனவே, அதற்கு பிறகு எனக்கு அங்கு இருக்க விருப்பமிருக்க வில்லை. நான் சில காலம் என் பெரியம் மாவுடன் வந்து தங்கியிருந்தேன்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் பெரியம்மாவின் மகன் மூலம் வரன் ஒன்று வந்தது. பெரியம்மாவின் மகனின் நண்பர் ஒருவர் ஆறு மாதகால விடுமுறையில் டுபாயிலிருந்து வந்திருந்தார்.

எனவே பெரியம்மாவின் வீட்டுக்கு வரும் சந்தர்ப்பத்தில் என்னைக் கண்ட அவர் என்னைத் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாக பெரியம்மாவிடம் கேட்டிருந்தார்.

என் பெரியம்மா உட்பட குடும்பத்தில் அனைவரும், அவர் வெளிநாட்டில் தொழில் புரிந்து மிகுந்த வசதிவாய்ப்புகளுடன் இருக்கின்றார்,

நீ அவரைத் திருமணம் செய்துகொண்டால் நீ சந்தோஷமாக வாழலாம் என்றெல்லாம் கூறி, அவரை எனக்கு திருமணம் செய்து வைக்க முயற்சித்தார்கள். எனினும், எனக்கு ஆரம்பத்தில் அதில் விருப்பமிருக்கவில்லை.

எனக்கு இனி என்ன திருமணம்? இப்படியே என் பொழுதைக் கழித்து விடுகின்றேன் என்று அந்த வரனைத் தட்டிக்கழித்தேன். எனினும், என் உறவுகளும், நண்பர்களும் என்னை விடுவதாய் இல்லை. ஒரு பெண் வாழ் நாள் முழுவதும் தனியாக வாழ முடியாது.

அவளுக்கென்று கட்டாயம் துணையொன்று அவசியம் என்றெல்லாம் எடுத்துக்கூறி என்னை திருமணத்துக்கு சம்மதிக்க வைத்தனர்.

என் பெரியம்மாவும் அவருடைய மகனும் முன்னின்று என் திருமணத்தை செய்து வைத்தார்கள். ஆறு மாதகால விடுமுறையில் இலங்கைக்கு வந்திருந்த என் கணவர் திருமணமாகி இரண்டு மாதங்களின் பின்னர் டுபாய்க்கு மீண்டும் பயணமானார்.

அவருடன் கழித்த அந்த இரண்டு மாதகாலமும் அவர் என்னை மிகுந்த அக்கறையுடன் பார்த்துக்கொண்டார். எங்களுக்குள் அந்நியோன்னிய மான நல்ல உறவு துளிர் விட ஆரம்பிக்கின்றது போன்ற உணர்வு எனக்குள் ஏற்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் ஒரு நாள் இரவு அவர் கடுமையான தலைவலியால் துடிதுடித்துக் கொண்டிருந்தார். அப்போது அவரை வைத்தியரிடம் செல்ல வருமாறு நான் அழைத்தேன். எனினும், அவர் என்னிடம் பெனடோல் இருக்கின்றது.

அதை குடித்தால் சரியாகிவிடும் என்றுகூறி, பையிலிருந்து வித்தியாசமான மருந்துவில்லையொன்றை எடுத்து குடித்தார். எனக்கு அப்போது அது பெனடோலை போல தெரியவில்லை.

நான் மறுபடியும் அவரிடம் இது பனடோலா என்று சந்தேகத்துடன் கேட்டேன். அதற்கு அவர் அந்த நாட்டு பனடோல் இப்படி தான் இருக்கும் என்று கூறிவிட்டார்.

எனவே அது தொடர்பாக தொடர்ந்து அவரிடம் கேள்விகேட்க நான் போகவில்லை. அன்றைய இரவு கழிந்தது. எனினும் பல சந்தர்ப்பங்களில் அவர் தலைவலி என்று கூறிக்கொண்டு பையிலிருந்த அந்த மருந்து வில்லைகளையே குடித்து வந்தார்.

இது இவ்வாறிருக்க, அவர் மீண்டும் தொழிலுக்காக வெளிநாடு பயணமானார். நான் அவருடைய தாயுடன் அவரின் வீட்டில் இருந்தேன்.

அதன்பின் தொலைபேசி அழைப்புகள், குறுந்தகவல்கள் என்று எங்கள் உறவு தொடர்ந்தது. அதுமட்டு மின்றி, எங்கள் இருவருக்குமிடையில் இருந்து வந்த உறவின் அடையாளமாய் நான் கருவுற்றேன்.

அதை என் கணவருக்கும் தெரியப்படுத்தினேன். நான் ஏழு மாத கர்ப்பிணியாக இருக்கும் வரை என் கணவர் என்னைப்பற்றியும் என் வயிற்றில் வளரும் குழந்தையைப்பற்றி யும் தொலைபேசி ஊடாக விசாரிப்பார்.

எனினும், அதற்கு பிறகு என் கணவரிடமிருந்து தொலைபேசி அழைப்புகளோ குறுந்தகவல்களோ எதுவுமே வரவில்லை. நான் அவருக்கு பல தடவைகள் அழைப்புகளை ஏற்படுத்திய போதும் அவருடைய தொலைபேசி நிறுத்தப்பட்டிருந்தது.

என் மாமியிடம் இது பற்றி கூறிய போது அவர் என் மீதே பழியைப் போட்டார். எனவே, எனக்கு என்ன செய்வது? யாரிடம் சென்று முறையிடுவது? என்று ஒன்றுமே

(18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்

## விரலின் நகம்



விரல் நகம்
துண்டித்தது
நகத்தை மட்டுமல்ல..
உன்னையும் தான்...

விரலைத் தாண்டி
வளரப்பிடிக்காமல்
வெட்டிக் கொண்டே வருகிறேன்...
இது வரை வளர்ந்ததில்லை...

இனி உன் கையில்..
நகம் மட்டுமல்ல..
என் வாழ்க்கையும்...

வெட்ட வெட்ட
வளர்ந்து கொண்டே இருப்பேன்
உன் விரல் நகம் போல...

- சௌந்தர்

## என் செய்தாய் நீ ...



என் செய்தாய் நீ !!!
உன் குரல் கேட்கும்
தருணங்களில் எல்லாம் - ஏனோ
தடுமாறித்தான் வார்த்தைகளை
வடிக்கிறது என் இதழ்கள்..

உன் குரல் ஓசை மட்டும்
நிசப்தமாய் ஒலிக்கிறது
என் உயிரினுள்...

காற்றைத் துளைத்து
இசை தரும் குழலைப் போல
என் உயிரைத் துளைத்து
வெளியேறுகிறது
உன் மௌனம் ....

உயிர் அமைதி கொண்டாலும்
மனதினுள் அலைகளாய் அடிக்கிறது
உன் நினைவுகள் ....

என் செய்தாய் எனை நீ !!!

- சஜன்யா


## தெய்வம் உன்னில்

அரை சாண் வயிற்றை
நிறைக்க யார் யாரிடமெல்லாமோ
கை நீட்ட வேண்டி வருகின்றது...!
உலகில் அதிகம் பேருக்கு
இந்த அவலம் தான்...!
குடிக்கப் பணம் கொடுக்கும் மனசு
ஏழை படிக்க கொடுக்க மறுப்பதேன்..?
கடவுள் உனக்குப் பணம்
தந்ததே கொடுக்கத் தானே தவிர
வட்டிக்குக் கொடுக்க அல்ல...
நல்ல மனதோடு உதவிப் பார்...
வயதான காலத்தில்
அதில் ஒரு நிம்மதி தெரியும்...
இருப்பவன் இருப்பவனுக்கே
கொடுத்தால் அதில் ஏதுதவி..?
இல்லாதவனுக்கு கொடுப்பது
அல்லவா உதவி....
நீ உன்னை மட்டுமே நேசித்தால்
வாழும் போதே சாகின்றாய்...
நீ பிறரை நேசித்தால்
செத்த பின்பும் வாழ்கின்றாய்
அவர்கள் மனதில் என்றும் தெய்வமாக.
உதவும் உள்ளம் இருந்தால்
மனித உருவில் தெய்வம்
உன்னில் பார்க்கிறேன்...
இதை நான் சொன்னால்
பைத்தியக்காரன் என்று
பட்டம் சூட்டும் உலகமடா இது...

- யாரோ



# குளிர்சாதனப்பெட்டியில் வைக்கக்கூடாத உணவுகள்!



குளிர்சாதனப்பெட்டியில் சில உணவுப் பொருள்கள் வைப்பதை தவிர்க்க வேண்டும்.
ஏனெனில், அந்த உணவுப் பொருள்கள் சில நேரங்களில் அழுகி விடும் என்பதால் சமையலுக்குப் பயன்படுத்த முடியாமல் போய்விடும்.

### வெங்காயம்

வெங்காயம் பொதுவாக காற்றோட்டமான சூழ்நிலையில் இருக்க வேண்டும். பொலிதீன் பையில் அடைத்து விற்கப்படும் வெங்காயத்தை நாம் வாங்கி வீட்டுக்குக் கொண்டு வந்த பிறகு அதனை காற்றோட்டமாக வைக்க வேண்டும்.

### பூண்டு

பூண்டை எப்போதுமே குளிர்சாதனப்பெட்டியில் வைக்கக் கூடாது. அப்படி வைத்தால் அது பூஞ்சணம் பிடிக்க ஆரம்பித்துவிடும். அதனைக் காற்றோட்டமான சூழலில் வைக்க வேண்டும். பூண்டுகளை வாங்கி வந்ததும், அதனை தனித்தனி பல்லாகப் பிரித்து எடுத்து வைக்கலாம்.

### உருளைக் கிழங்கு

உருளைக் கிழங்குகளில் பச்சை வேர்கள் மற்றும் பச்சை நிறம் இல்லாமல் பார்த்து வாங்க வேண்டும். காற்றோட்டமான சூழலில் வைக்க வேண்டும். பொலித்தீன் பையில் வைக்கக் கூடாது.



### தேன்

உலகத்திலேயே கெட்டுப் போகாத உணவுப் பொருள் என்று ஒன்று உண்டு என்றால் அது தேன்தான். ஆனால், நாம் இப்போது கடைகளில் வாங்கப்படும் தேன், பல வித பொருள்கள் கலக்கப்பட்டு வருகிறது.எனினும், தேனை குளிர்சாதனப்பெட்டியில் வைத்து பராமரிக்கக் கூடாது.

### வாழைப்பழம்

வாழைப்பழத்தை குளிர்சாதனப்பெட்டியில் வைத்தால் அது விரைவில் கெட்டுப் போய் தோல் கறுத்து விடும். எனவே வாழைப் பழத்தை வைக்காதீர்கள்.

### முலாம்பழம்

கடையில் இருந்து முழுதாக வாங்கி வந்த முலாம்பழத்தை குளிர்சாதனப்பெட்டியில் வைக்கக் கூடாது. அவ்வாறு வைத்தால், முலாம் பழத்தில் இருக்கும் சில சத்துக்களை பழம் இழந்து விடுகிறது. ஆனால், நறுக்கிய முலாம்பழத்தை பாத்திரத்திலோ அல்லது பொலித்தீன் பையிலோ போட்டு குளிர்சாதனப்பெட்டியில் வைக்கலாம்.

இதேபோல, அன்னாசி, கிவி பழம், பிலம் பழம், மாங்காய் போன்ற வற்றையும் குளிர்சாதனப்பெட்டியில் வைக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலையுதிர் காலமான அரபு வசந்தம்



- வேல்தர்மா

கடந்தமாதம் (ஜனவரி)-25ஆம் திகதி எகிப்தில் அரபு வசந்தந்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவு நாள். கடந்த நான்கு ஆண்டுகளாக ஜனவரி-25ஆம் திகதி அதிக சுதந்திரம் கோரும் பெரும் ஆர்ப்பாட்டங்களுடன் நினைவு கூரப்படும். இந்த ஆண்டு எதுவும் நடக்கவில்லை. நடக்காமல் விட்டதற்கான காரணம் போதிய சுதந்திரம் கிடைத்தமையால் அல்ல. உள்ள சுதந்திரமும் பறிக்கப் பட்டுவிட்டது. மக்கள் கைது செய்யப் படலாம் என்ற அச்சத்தில் எகிப்திய அரபு வசந்தம் உருவான தஹ்ரீர் சதுக்கப் பக்கம் போகவில்லை. ஜனவரி - 25இற்கு மூன்று மாதங் களுக்கு முன்னரே பலர் கைது செய்யப்பட்டு விட்டனர். ஆர்ப்பாட் டத்தை ஏற்பாடு செய்யக் கூடியவர்கள் கடுமை யாகக் கண்காணிக்கப் பட்டனர். அவர்கள் கூடக் கூடிய இடங்கள் தீவிர சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டன.

அரபு வசந்தத்தின் பிறப்பிடமான துனிசியா வில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மீண் டும் தலை தூக்கியுள்ளன. அங்கு ஏழு இலட்சம் பேர் வேலையின்றி இருக்கின் றார்கள். இது மக்கள் தொகையின் 15 விழுக்காடாகும். 62 விழுக் காடான பட்டதாரிகள் வேலை யின்றியும், இளையோரில் 38 விழுக்காட்டினர் வேலையின்றி யும் இருக்கின்றனர். இது ஒரு மக்கள் எழுச்சியின் பிறப்பிடமாக மீண்டும் உருவாகியுள்ளது. ஊரடங்குச் சட்டம் அங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

துனிசியாவின் மொஹமட் பௌஜிஜி (Mohamed Bouazizi) மறக்கப்பட்டுவிட்டார். எகிப்த் தின் அஸ்மா மஹ்பூஸ் என்றால் யாருக்கும் தெரியாது. இஸ்லாமி யர்களின் வேலை இறை நம்பிக்கை அற்ற அமெரிக்கர் களை ஒழித்துக் கட்டுவதே என அல் கெய்தா பரப்புரை செய்து கொண்டிருக்க. இஸ்லாமியப் பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்கா போராடிக் கொண்டி ருக்க; இஸ்லாமியர்களும் மனிதர் களே! அவர்களும் இம்மண்ணில் வாழ வேண்டும் என எழுந்தவர்கள் இவர்கள் இருவரும். அரபு மக்கள் தமது மக்கள் எழுச்சியை மல்லி கைப் புரட்சி என அழைத்தனர். மேற்கு நாட்டு ஊடகங்கள் அதை அரபு வசந்தம் என அழைத்தன. துனிசியா, எகிப்து, லிபியா, சூடான் ஆகிய நாடுகளில் ஆட்சி யாளர்கள் பதவியில் இருந்து விரட் டப்பட்டனர். 14 மாத எழுச்சியில் 4 ஆட்சியாளர்களின் மொத்த 117 ஆண்டுகால ஆட்சி முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது.

துனிசியாவில் தந்தையற்ற தன் குடும்பத்தைக் காப்பாற்ற தெரு வோரம் பழவியாபாரம் செய்து கொண்டிருந்த மொஹமட் பௌஜிஜியை ஏழு அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பணத்தை இலஞ்சமாகக் கொடுக்க மறுத்தமைக்காக, துனிசிய அரச காவற்துறையைச் சேர்ந்த பெண் ஒருத்தி தாக்கி அவன் முகத்தில் காறி உமிழ்ந்தாள். அவன் தற் கொலை செய்து கொள்ள, துனி சியாவில் உருவான இளையோர் எழுச்சி மேற்காசியவிலும் வட ஆபிரிக்காவிலும் உள்ள பல நாடுகளிற்கும் பரவியது. அல்ஜீரியா, லிபியா, எகிப்து, சிரியா, சூடான், சவுதி அரேபியா, பாஹ்ரேன், ஈராக் எனப் பல நாடு களில் மக்கள் ஆடம்பர வாழ்கை வாழும் அக்கிரம ஆட்சியாளர் களுக்கு எதிராகக் கிளர்ந்தனர். மன்னராட்சி அல்லது படைத் துறையினரின் ஆட்சி மட்டுமே மேற்காசிய மற்றும் வட ஆபிரிக்க நாடுகளில் நடக்கின்றன.

துனிசீய மக்கள் ஆரம்பித்து ஙவத்த அரபு வசந்தத்தால் உந்தப்பட்ட எகிப்திய மக்கள் ஒரு திடமான சக்தியாக திரண்டு அதிக இரத்தம் சிந்தாமல் 18 நாள்கள் நடத்திய புரட்சியின் மூலம் 2011பெப்ரவரி 11ஆம் திகதி ஹஸ்னி முபாரக்கைப் பதவியில்

விரட்டினர். ஆனால் புரட்சி என் பது ஒரு ஆட்சியாளரை மாற்றுவது டன் முற்றுப் பெறுவதல்ல என் பதற்கு எகிப்து ஒரு நல்ல உதாரண மாக அமைகிறது. எகிப்தில் உருவான மக்கள் எழுச்சி அமெரிக் காவின் பர்துகப்புத்துறையினரை யும் உளவுத் துறையினரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. அமெரிக்கா தான் பாதுகாத்து வந்த அடக்கு முறை ஆட்சியாளர் களில் ஒருவரான ஹஸ்னி முபாரக்கைக் கைவிடும் அளவிற்கு நிலை மோசமாக இருந்தது.

**துனிசியாவில் தந்தையற்ற தன் குடும்பத்தைக் காப்பாற்ற தெருவோரம் பழவியாபாரம் செய்து கொண்டிருந்த மொஹமட் பௌஜிஜியை எழு அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பணத்தை இலஞ்சமாகக் கொடுத்த மறுத்தமைக்காக துனிசிய அரச காவற்துறையைச் சேர்ந்த பெண் ஒருத்தி தாக்கி அவன் முகத்தில் காறி உமிழ்ந்தாள். அவன் தற் கொலை செய்து கொள்ள துனிசியாவில் உருவான இளையோர் எழுச்சி மேற்காசியவிலும் வட ஆபிரிக்கா விலும் உள்ள பல நாடுகளிற்கும் பரவியது. அல்ஜீ ரியா, லிபியா, எகிப்து, சிரியா, சூடான், சவுதி அரே பியா, பாஹ்ரேன், ஈராக் எனப் பல நாடுகளில் மக்கள் ஆடம்பர வாழ்கை வாழும் அக்கிரம ஆட்சியாளர் களுக்கு எதிராகக் கிளர்ந்தனர்.**

ஒரு புரட்சி என்பது அக்கிரமம் பிடித்த ஆட்சியாளர்களை ஆட்சி யில் இருந்து அகற்ற வேண்டும், ஆட்சி முறைமையை மாற்ற வேண்டும், ஆட்சி பிழையானவர் களின் கைகளுக்குப் போகமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மக்கள் வாழ்வு மேம்பட நடவடிக் கைகள் எடுக்கப்பட வேண்டும். எகிப்திய மக்கள் 18நாள்கள் நடத்திய புரட்சியின் மூலம் பெப்ரவரி 11ஆம் திகதி ஹஸ்னி முபாரக்கைப் பதவியில் இருந்து இருந்து விரட்டினர். ஐக்கிய அமெரிக்காவின் உளவுத் துறை எகிப்தியப் படையினரை புரட் சியை எதிர்க்காமல் இருப்பதை உறுதி செய்தது. இதனால் எகிப்தியப் படைத்துறைக்கு புரட்சியாளர்களால் எந்த விதப் பாதிப்பும் ஏற்படவில்லை. எகிப்தியப் படைத்துறையின் உயர்பதவிகளில் இருப்போர் அமெரிக்காவில் பயிற்சி பெற்றவர்கள். இந்தப் புரட்சியை முன்னெடுப்பதில் முன்னணியில் நின்று செயற்பட்டவர் ஒரு இளம் பெண். அஸ்மா மஹ்பூஸ் என்ற 26 வயதான எகிப்தியப் பெண். ஹஸ்னி முபராக்கின் அடக்கு முறைக்கு எதிராக தனியான ஒரு போராட்டத்தை ஆரம்பித்தாள். முதலில் முகவேட்டில் அனை வரையும் தஹ்ரீர் சதுக்கத்தில் திரளும்படி அழைப்பு விடுத்தாள். அவளது அழைப்பை மூன்று இளைஞர்கள் மட்டுமே வந்தனர். முகவேட்டின் மூலம் தகவலை அறிந்த காவற்துறை அவர்கள் நாலு பேருக்கும் முதல் அங்கு திரண்டுவிட்ட னர். அந்த மூன்று இளைஞர்களையும் கைது செய்த காவற்துறையினர் அஸ்மா மஹ்பூஸை எச்சரித்து விட்டுச் சென்றனர். அத்துடன் அஸ்மா மஹ்பூஸ் சளைக்கவில்லை பின்னர் ஒரு காணொளியைத் தயாரித்து அதன் மூலம் நான் மீண்டும் தஹ்ரீர் சதுக்கம் செல்வேன் உங்களுக்குத் தன் னம்பிக்கை இருந்தால் என்னுடன் வாருங்கள் என்று அறை கூவல் விடுத்தாள். அது பெரும் மக்கள் எழுச்சியாக மாறி 18 நாள்களில் ஹஸ்னி முபராக்கின் ஆட்சியை எகிப்தில் இருந்து அகற்றியது. ஆனால் தொடர்ந்து ஆட்சியைக் கைப் பற்றியவர்களோ புரட்சியை முன் னெடுத்த இளைஞர்களின் மதசார் பற்ற கொள்கைக்கு முரணான இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பினர். அவர்களின் ஆட்சி ஹஸ்னி முபாராக்கின் ஆட்சியி லும் பார்க்க மோசமானதாக அமைந்தது. இதனால் இளைஞர் கள் மீண்டும் கிளர்ந்து எழுந்த போது இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பை ஆட்சியில் இருந்து அகற்றி விட்டு படையினர் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டனர். மீண்டும் மக்கள் அடக்கு முறை ஆட்சிக்கு உள்ளாகி உள்ளனர். இன்னும் ஒரு மக்கள் எழுச்சி எகிப்தில் ஏற்பட தற்போது வாய்ப்பில்லை. எகிப்தின் தேசிய வருமானத்தில் முக்கிய பங்கு வகித்த உல்லாசப் பயணத்துறை மோசமாகப் பாதிக்கப் பட்டுள் ளது. இளையோர் மத்தியிலான வேலைவாய்ப்பின்மையே அரபு வசந்தத்திற்கு வித்திட்டது. அது அரபு வசந்த எழுச்சிக்கு முன்பிருந் ததை விட இப்போது அதிகரித் துள்ளது. எகிப்தின் பாதீட்டுப் பற்றாக்குறை பத்து விழுக்காட்டி லும் அதிகம். அதன் கடன் பளு அதன் மொத்தத் தேசிய உற்பத்தியிலும் அதிகமானதாகும்.

லிபியாவில் அரபு வசந்தம் ஒரு பெரும் உள்நாட்டுப் போராக வெடித்தது. கடாஃபியைப் பதவியில் இருந்து வெளியேற்றத் துடித்த மேற்கு நாடுகள் அவரது படையினருக்கு எதிராக போர்

(22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விட்டுக் கொடுத்தலை வினை ஆக்கலாமா?

கல்யாணத்துக்குப் பிறகு கணவரை திருப்திப்படுத்துவதையும் அவர் மனம் கோணாமல் மகிழ்ச்சியாக வைத்திருப்பதையுமே தலையாய கடமையாகச் செய்கிற மனைவிகள் இருக்கிறார்கள். திருமணம் என்கிற உறவில் இணைகிற இருவரும் ஒருவருக்கொருவர் சமமானவர்களே... பெரும்பாலான திருமணங்களோ பெண்களின் தியாகங்களை மையப்படுத்தியே நகர வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றன. சில திருமணங்களில் அந்தத் தியாகமானது வரம்பு மீறிப் போவதும் உண்டு. உதாரணத்துக்கு மனைவியின் தோற்றத்தை விமர்சனம் செய்கிற கணவர்கள், சதா சர்வ காலமும் ஏதோ ஒரு குறையைக் கண்டு பிடித்து சொல்லிக் கொண்டே இருப் பார் கள். அத்துடன் கணவரின் அதிருப்தி அடங்கி விடாது. அடுத்து மூக்கு சரியில்லை.... தொப்பை இருக்கிறது... நடை சரியில்லை... உடை சரியில்லை என ஒவ்வொன்றாக அடுக்குவார்கள். கணவரின் சந்தோ ஷமே தன் சந்தோஷமாக நினைக்கிற மனைவியும் ஒவ்வொன்றையும் அவர் விருப்பப்படி மாற்றிக் கொள்வதில் முனைப்பாக இருப்பார். நீங்கள் எப்படி இருந்தாலும் அப்படியே ஏற்றுக் கொள்வதில்தான் இருக்கிறது திருமண பந்தத்தின் அழகு. இருவரில் ஒருவர் தன் துணையை தன் விருப்பப்படி மாற்றுவதிலும் தான் இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைந்து போகக் கூடியவராகவும் மாற்ற நினைக்கும் போது அங்கே அடிப்படையான அன்பும் காதலும் காணாமல் போகிறது.

குறை சொல்லிப் பழகுகிறவர்களுக்கு அதுவே ஒரு பழக்கமாகவும் மாறி விடுகிறது. அதன் தொடர்ச்சியாக ஆதிக்க மனப்பான்மை அதிகரிக்கிறது. இன்னும் பல திருமணங்களில் தன் துணை எப்படி உடை அணிய வேண்டும், எப்படி ஹேர் ஸ்டைல் செய்து கொள்ள வேண்டும், என்ன சமைக்க வேண்டும், என்ன சாப்பிட வேண்டும், ஓய்வு நேரத்தை எப்படி செலவழிக்க வேண்டும், உணர்வுகளை எப்படி வெளிப்படுத்த வேண்டும், உடலமைப்பை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும், வேலைக்குப் போகலாமா, கூடாதா? அப்படிப் போனால் எப்படிப்பட்ட வேலையைத் தேர்ந்தெடுக்க வேண்டும், யாருடன் நட்புப் பாராட்ட வேண்டும் என்கிற வரை ஒவ்வொன்றுக்கும் வரையறைகள் விதிக்கிற கொடுமையும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

ஒரு பெண் தனது காதலர் அல்லது கணவருக்காக சகல விதங்களிலும் விஷயங்களிலும் தன்னை மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கிறாள் என்றால் அவளுக்கு தன்னம்பிக்கையோ, ஆழமான ஆளுமையோ இல்லை என அர்த்தம். தன்னைப் பற்றிய சுயமதிப்பீடே இல்லாமல், தனது இந்தச் செய்கையின் மூலம் சிறுக சிறுகத் தன்னைத் தொலைக்கவும் துணிகிறாள் என்றே அர்த்தம்.

விட்டுக் கொடுப்பது என்பது மகத்தான மனித குணம் என்பதை மறுப்பதற்கில்லை. அதே நேரம் அந்த குணத்தை வாழ்க்கைத்துணை தனக்கான ஆயுதமாகக் கையில் எடுப்பதை அனுமதிப்பதும் கூடாது. எப்போதும் ஒருவரே விட்டுக் கொடுக்கிற வாழ்க்கையில் துளி கூட காதல் இருக்காது. ஒருவரது சுய விருப்பு வெறுப்புகளுக்காக இன்னொருவரை மாற்ற நினைப்பது மிகப்பெரிய துரோகம். திருமண உறவில் இருவரில் ஒருவர் கை ஓங்கியிருந்தாலே பிரச்சினை தான். இருவரும் சம அந்தஸ்தில் இருப்பதுதான் சிறந்தது. பெண்களைப் பொறுத்தவரை தன்னை விட அழகான, அதிகம் படித்த, அதிகம் சம்பாதிக்கிற, வயதான நபரையே வாழ்க்கைத் துணையாக்கிக் கொள்ள நினைப்பார்கள்.

அதிக அனுபவசாலிகளாகவும் அதிக புகழ் வெளிச்சத்தில் இருப்பவர்களாகவும் இருக்கிற ஒருவரால் துணையை தனக்கு இணையாக நடத்த முடிவதில்லை. எல்லா விஷயங்களிலும் தனக்கு இணையாக இருக்கும் துணையை மணக்கும் போது இத்தகைய பிரச்சினைகள் வர வாய்ப்பில்லை. இது நமக்கு மட்டுமல்ல... உலகம் முழுவதிலும் காணப்படுகிற உண்மை.

துணைக்கு மரியாதை கொடுக்க வேண்டியதன் அவசியம் தெரிந்திருக்கும். இருவரிடமும் ஏற்ற இறக்கங்கள் காணப்படுகிற போது, அந்த உறவானது உணர்வு ரீதியாகவும், உடல் ரீதியாகவும் வன்முறை செயல்களில் ஈடுபடவைக்க அடிகோலும். மேலோட்டமாகப் பார்க்கும் போது கணவனுக்கு மனைவியோ, மனைவிக்கு கணவனோ சொல்கிற கட்டுப்பாடுகளும், விமர்சனங்களும் ஏதோ அவர்களுக்குப் பாடம் எடுக்கிற மாதிரித் தெரியலாம். தொடர்ச்சியாக அதை சந்திக்கிறவர்களுக்குத்தான் அது எத்தனை பெரிய உணர்வுப் போராட்டம் என்பதும், அதன் வலியும் தெரியும்.

தொடர்ந்து இப்படி துணையின் விமர்சனங்களுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் உள்ளாகும் போது தான் நல்ல மனிதர் இல்லையோ என்கிற உணர்வைக் கொடுக்கும். மனைவிக்கு அல்லது கணவருக்கு கற்றுக் கொடுக்கிற தொனி யில் சொல்லப்படுகிற சில விஷயங்கள், அவர்கள் எதற்கும் உபயோகமற்றவர்கள் என்ற எண்ணத்துக்கு ஆளாக்கும். இதை சகித்துக் கொள்ளப் பழகும் பட்சத்தில் சுயம் இழப்பது என்பது சீக்கிரமே நடப்பதுடன், வாழ்க்கையின் மீது ஒரு குழப்பத்தையும், பயத்தையும், பாதுகாப்பற்ற உணர்வையும் உருவாக்கி விடும்.

கணவன், மனைவியில் இருவரில் யார் கை ஓங்கியிருக்கிறதோ, அவர் எடுக்கும் முடிவுகளே குடும்பத்தில் இறுதியாக இருக்கும். அதை ஏற்றுக் கொள்வது துணையின் தலையெழுத்து என்றும் எதிர்த்தால் அந்த உறவுக்கே பங்கம் வரலாம் என்கிற பயமுறுத்தலும் எதிரே நிற்கும். கணவனோ, மனைவியோ தன் துணையைப் பற்றி காரணங்களே இல்லாமல் அதிகபட்ச எதிர்பார்ப்புகளை முன்வைப்பார்கள். அவர்களது தேவைகளில் நியாயம் இருக்காது. நேர்மை இருக்காது.

எப்போதும் எதையாவது பற்றி குறை சொல்லிக் கொண்டிருப்பது அவர்களது சுபாவமாகவே மாறியிருக்கும். பெரும் பாலும் மனைவியானவள், ஆரம்ப கட்டத்தில் இவற்றை எல்லாம் தன் மீது சுமத்தப்படுகிற பழிகள், தவறான எதிர் பார்ப்புகள் என்று உணராமல், உண்மை தான் போல என்றே நினைத்துக் கொள் வாள். எல்லாம் ஏற்கனவே திட்டமிடப்பட்டு தன் மீது வேண்டுமென்றே சுமத்தப்பட்ட பழிகள் என்பதை உணர்வதற்குள் அவள் தன்னைத் தொலைத்து விட்டு வெகுதூரம் வந்திருப்பாள்.

துணையைப் பற்றி தவறான விமர்சனங்களை முன் வைப்பது, கெட்ட வார்த்தைகளில் அநாகரிகமாக திட்டுவது, துணையின் உணர்வுகளைக் காயப்படுத்துகிற மாதிரிப் பேசுவது போன்றவை கூட இந்த அடக்குமுறையில் அடக்கம்தான்.

அது போக, துணையின் குடும்பத்தாரைப் பற்றி குறை சொல்வதும், அநாகரிகமாக விமர்சனம் செய்வதும், நீதான் என் வாழ்க்கையையே நாசமாக் கினாயே... உன்னாலதான் எனக்கு எல்லாமே தப்புத் தப்பா நடக்குது... என்று பழி போடுவதும் கூட இத்தகைய ஆதிக்க மனோபாவத்தின் வெளிப்பாடுகளே. கடைசியாக உணர்வுரீதியான மிரட்டலை ஆயுதமாக எடுப்பது.

இருவரும் சமம் எனக் கருதப்படாத உறவுகள் ஆரோக்கியமானவை அல்ல. அது ஒருவகையான கட்டுப்பாடு. அதை ஆரம்பத்திலேயே அனுமதிக்கக்கூடாது. முதலிலேயே அதை எதிர்ப்பதுதான் நீண்ட காலக் காதலுடன் கூடிய வாழ்க்கைக்கு வழிகாட்டும். அந்த இடத்தில் கொஞ்சம் இடறி, நம் மனைவி தானே... நம் கணவர்தானே... அவருக்குச் செய்யாமல் வேறு யாருக்கு செய்யப் போகிறோம்... அவர் சந்தோஷத்தைவிட வேறென்ன பெரிதாக இருந்துவிடப் போகிறது என நினைக்க ஆரம்பித்தால்... பிறகு உங்கள் வாழ்க்கையை யாராலும் காப்பாற்ற முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரியாவில், இஸ்லாமிய தேசம் என்ற ISIS கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் என்ன நடக்கிறது? நெதர்லாந்து புலனாய்வுத்துறையான AIVD, கடந்த ஒன்றரை வருடங்களாக ஆய்வு செய்து, அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

ஐரோப்பாவில் இருந்து ஐ.எஸ். இயக்கத்தில் சேரவேண்டுமென்ற அவாவுடன் செல்லும் இளைஞர்களுக்கு உண்மை நிலையை எடுத்துச் சொல்லி, அவர்களைச் சேர விடாமல் தடுப்பதே அந்த அறிக்கையின் நோக்கம்.

அந்த அறிக்கையில் இருந்து சில பகுதிகள்:

♦ ஐ.எஸ். பிரதேசத்துக்குப் புதிதாக வரும் ஒவ்வொருவரும், தேசியத் தலைவர் அபுபக்கர் அல் பாக்தாதிக்கு விசுவாசமாக இருப்பதாக உறுதிமொழி எடுக்க வேண்டும்.

♦ ஐரோப்பாவில் இருந்து செல்பவர்கள் தமக்கு அங்கே வசதியான வீடுகள் கிடைக்கும் நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால், ஐ.எஸ். பரப்புரைகளுக்கு மாறாக, எந்த வசதியும் இல்லாத் வீடு தான் கிடைக்கிறது.



# இஸ்லாமிய தேசத்தின் உள்ளே என்ன நடக்கிறது?

அங்கிருக்கும் குப்பை, கூளங்களை அவர்களே அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டி இருக்கும். மேலும், சில மணி நேரமே மின்சாரம் கிடைக்கின்றது.

♦ ஐ.எஸ். கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள், உளவாளிகள் ஊடுருவலாம் என்ற அச்சம் பரவலாக உள்ளது. எல்லோரும் சந்தேகிக்கப் படுகின்றனர், கண்காணிக்கப் படுகின்றனர்.

♦ உளவாளிகள் என்ற சந்தேகத்தின் பெயரில் பலர் கைது செய்யப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அது மட்டுமல்ல அங்கிருந்து யாரும் தப்ப முடியாது. ஐரோப்பாவில் இருந்து வந்தவர்கள் என்றாலும் மரணதண்டனையில் இருந்து விதிவிலக்குக் கிடையாது.

♦ ஐ.எஸ். படையினர் யுத்தத்தில் ஒரு கிராமத்தைக் கைப்பற்றினால், அங்கு கொலைகள், சித்திரவதைகள்,பாலியல் வன்புணர்ச்சிகள் நடத்துவது சாதாரணமாக நடக்கிறது.

♦ ஐரோப்பாவில் இருந்து புதிதாகச் சேரும் ஒருவர், ஏற்கனவே ஐ.எஸ். கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் ஒருவரைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அந்த நபர் பொறுப்பு நிற்க வேண்டும். புதிதாகச் சேருவோர் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப் படுகின்றனர். மேலும் அவர்களின் கடவுச்சீட்டு, அடையாள அட்டைகளை வாங்கி வைத்துக் கொள்வார்கள்.

♦ கல்வித் தகைமை கொண்டவர்களுக்கு உடனடியாகவே வேலை கிடைக்கிறது. உதாரணத்திற்கு, தொழில்நுட்ப பொறியியலாளர்கள், மருத்துவர்கள், பல்வேறு மொழிகளில் புலமை கொண்டவர்களுக்கு வேலை நிச்சயம். ஏனையோர் படைகளில் சேர்க்கப்படுகின்றனர்.

♦ குடும்பமாக பிள்ளைகளோடு செல்பவர்கள் கூட, ஆண்கள் வேறு, பெண்கள் வேறு என்று பிரித்து வைக்கப்படுகின்றனர். ஆண்கள் கட்டாய இராணுவப் பயிற்சிக்கு செல்ல வேண்டும்.

♦ பெண்கள் இராணுவ சேவையில் ஈடுபடுத்தப்படுவதில்லை. ஆனால், கலாச்சாரப் பொலிஸ் (அல் கண்சா படையணி) வேலைக்கு சேர்க்கிறார்கள். தெருக்களில், பொது இடங்களில், பெண்கள் ஐ.எஸ். கட்டுப்பாடுகளை பின்பற்றுகின்றனரா என்பதை கண்காணிக்கும் பணி அவர்களுடையது.

♦ பிள்ளைகள் பாடசாலைக்கு அனுப்பப்பட்டாலும், அங்கு அவர்களுக்கு ஐ.எஸ். கொள்கைகளை கற்பிக்கிறார்கள். ஆயுதங்களைக் கையாள்வது எப்படி என்று சிறுவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். வருங்காலக் கணவனுக்கு என்னென்ன பணிவிடைகள் செய்ய வேண்டுமென்று சிறுமிகளுக்கு சொல்லிக் கொடுக்கிறார்கள்.

♦ பெண் பிள்ளைகள் ஒன்பது வயதானால் உடலை மூடும் ஆடை அணியுமாறு நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். ஆண் பிள்ளைகள் ஒன்பது வயதானால், இலகுவான இராணுவ பயிற்சிக்கு அழைக்கப் படுகின்றனர். மேலும் பொது இடங்களில் நடக்கும் மரண தண்டனைக் காட்சிகளைப் பார்ப்பதற்கு நிர்ப்பந்திக்கப் படுகின்றனர்.

♦ பெண்கள் அதிகமான பிள்ளைகளைப் பெறுவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

♦ தனியாக வாழும் இளம் பெண்களும், விதவைகளும் பெண்கள் விடுதி ஒன்றுக்கு அனுப்பப் படுகின்றனர். அங்கு நிலவும் வசதிக் குறைபாடுகள் வாழ்க்கையை கடினமாக்குகின்றன.

♦ ஊத்தை, குப்பை, கரப்பான் பூச்சிகள் ஊரும் இடங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். இந்தக் கஷ்டம் காரணமாக, பல பெண்கள் திருமணம் செய்து கொள்கின்றனர்.

♦ போராளிக் கணவனை போரில் பலி கொடுத்த விதவைகள் கூட, இன்னொரு போராளியை மறுமணம் செய்கின்றனர். தமது குழந்தைகளின் தகப்பனை நினைத்துக் கவலைப்பட்டாலும் உணர்ச்சிகளை மறைத்துக் கொள்கிறார்கள்.

♦ குறைந்த தொகையாக இருந்தாலும், போராளிகளுக்கு சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால், அண்மைக் காலத்தில் ஐ.எஸ். நடத்தி வந்த எண்ணெய்க் கடத்தல் வியாபாரம் பெருமளவு பாதிக்கப் பட்டுள்ளது. அதனால் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினை காரணமாக, சம்பளம் ஒழுங்காக கொடுக்க முடிவதில்லை.

♦ ஐ.எஸ். பிரதேசத்தினுள் எந்த நேரமும் விமானக் குண்டு வீச்சு நடக்கலாம் என்ற அச்சம் நிலவுகின்றது. பொது மக்கள் அடிக்கடி குண்டுவீச்சுகளுக்கு பலியானாலும், யாரும் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விட்டு வெளியேற முடியாது. இரகசியமாகத் தப்பியோடி பிடிபட்டால் மரண தண்டனை நிச்சயம்.

♦ மருத்துவ மனைகளில் மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. வைத்தியர்களும் குறைவு. குறிப்பாக பெண் மருத்துவர்கள் மிக மிகக் குறைவாக இருப்பதால், கர்ப்பிணிப் பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். பிரசவம் பார்ப்பதற்கு மருத்துவர்களோ, தாதியரோ இல்லாத நிலையில் சிசு மரணவீதம் அதிகமாக உள்ளது.

## உச்சந் தலையடிவாங்கிய.....

( 03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாரதூரமான சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் பொலிஸார் முறைப்படி நடவடிக்கை எடுப்பதற்குப் பயப்படும் நிலைமையே கடந்த காலத்தில் நிலவியது.

ஞானசாரதேரர் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் ஓடிய போதும், கொழும்பு புறநகர் பகுதியிலுள்ள ஒரு கிறிஸ்தவ தேவாலயத்துள் புகுந்து குருவானவரை வயிற்றில் உதைத்துடன், அங்கிருந்த பல இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்களை அடித்து நொருக்கி சேதப்படுத்திய போதும், மஹியங்கனைப் பிரதேசசபை உறுப்பினர் விஜிததேரர் நடத்திய ஊடக மாநாட்டில் புகுந்து, வன்முறைகளை மேற்கொண்டு ஆவணங்களைப் பறித்துச் சென்ற போதும் , அமைச்சர் ரிசாட் பதியுதீனின் செயலகத்துக்குள் அத்துமீறிப் புகுந்து பாரதூரமான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும், அவர் கைது செய்யப்படவுமில்லை; விளக்கமறியலில் தடுத்து வைக்கப்படவுமில்லை.

அது மட்டுமன்றி முஸ்லிம் பள்ளிவாசல்களின் மீது நடத்தப்பட்ட, தாக்குதல்கள், முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மீது இடம்பெற்ற வன்முறைகளிலெல்லாம் இவரின் வழிகாட்டலே பிரதான பங்கு வகித்தது.

கடந்த அரசாங்க காலத்தில் அதிகார பீடங்களின் செல்லப்பிள்ளையாக சட்டங்களையும், நீதியையும் காலில் போட்டு மிதித்த அதே வழிமுறை ஹோமாகமவிலும் பிரயோகிக்க எடுக்கப்பட்ட முயற்சி தோற்கடிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஞானசாரதேரர் விளக்கமறியல் காலம் முடிந்து வெளிவரும் போது விமல் வீரன்ச, தினேஷ்குணவர்த்தன, உதயகம்மன்வெல போன்றோரும் அவர்களின் ஆதரவாளர்களும் ஞானசாரதேரரை இராணுவ வீரர்களைக் காப்பாற்றச் சிறை சென்ற தியாகியாகச் சித்தரித்து மாலைபோட்டுப் பெரும் வரவேற்பு விழா வைத்தால் ஆச்சரியப்பட்டு விட முடியாது. ஆனாலும் இந்த முதலடி உச்சந்தலையடி என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார இராசி பலன்

**03.01.2016 –09.02.2016**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**மேஷம்**



உற்சாக மனதுடன் பணிகளை துவங்குவீர்கள். சமூக நிகழ்ச்சிகளில் பங்கேற்று, இனிய அனுபவம் காண்பீர்கள். வாகனப் பயணம் அதிகரிக்கும். புத்திரர் உங்கள் சொல் கேட்டு நடப்பர். உறவினர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். ஆரோக்கியத்தில் கவனம் வேண்டும். மனைவியின் செயல்கள் சிறப்பாக அமையும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் கூடும். அரசு வகையில் உதவி கிடைக்கும்.

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள்**

**ரிஷபம்**



எதிர்பார்த்த நன்மை முழு அளவில் கிடைக்கும். உடன்பிறந்தவரின் செயலை குறை சொல்ல வேண்டாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் செயல்பாடு பெருமை தேடித்தரும். நிலுவைப் பணம் வசூலாகும். மனைவி பெருந்தன்மை குணத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி இலக்கை விரைந்து நிறைவேற்றுவர். வெளியூர் பயணத்தால், இனிய அனுபவம் உண்டாகும்.

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்**

**மிதுனம்**



உறவினர்களின் உதவி கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். வாகனத்தின் பயன்பாடு சிறப்பாக இருக்கும். பிள்ளைகளின் செயல்பாட்டில், தாமதம் உருவாகும். ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வீர்கள். வழக்கு விவகாரத்தில் அனுகூலம் கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் பெற்றோரின் அன்பை பெறுவர்.

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**கடகம்**



உங்கள் செயல்களில் மனிதாபிமானம் நிறைந்திருக்கும். விலகிச் சென்ற நண்பரும், அன்பு பாராட்டுவர். தாயின் அன்பு, ஆசி ஊக்கம் தரும். பூர்வ சொத்தில் ஓரளவு வருமானம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வதால், வளர்ச்சி சீராகும்.

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**சிம்மம்**



மனதில் ஆன்மிக சிந்தனை மேலோங்கும். அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனப் பயன்பாடு சிறப்பாக அமையும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்**

**கன்னி**



பிறர் உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவர். பேச்சு செயலில் நிதானம் நிறைந்திருக்கும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக செயல்படுவர். குடும்பத் தேவையை தாராள பணச் செலவில் நிறைவேற்றுவீர்கள். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சியும், பணவரவும் உண்டாகும். பணியாளர்கள், நிர்வாகத்தின் நன்மதிப்பை பெறுவர். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும்.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்.**

**துலாம்**



செயல்களில் உற்சாகம் பிறக்கும். அன்புக்குரியவர்களின் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். எதிரியிடம் விலகி இருப்பது நல்லது. சீரான ஓய்வு உடல்நலம் பாதுகாக்கும். மனைவி வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி படிப்படியாக உயரும். பணியாளர் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்றுக்கொள்வர். பெண்கள் விரும்பிய பொருள் வாங்குவர்.

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**விருச்சிகம்**



முக்கியமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். அக்கம் பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். பகைவர் வியக்கும் அளவில் வாழ்க்கைத்தரம் உயரும். மனைவி உறுதுணையாக இருப்பார். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் நன்மதிப்பை பெறுவர்.

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**தனுசு**



இடம் சூழல் உணர்ந்து பேசுவீர்கள். செயல்க்ள் வெற்றி இலக்கை அடையும். வீட்டுச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த உதவி தாமதமாகும். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவைப்படும். லாபம் சுமார். பணியாளர்கள், நிர்வாகத்தின் வழிகாட்டுதல் தவறாமல் பின்பற்றவும். பெண்கள் சிக்கனத்தைக் கடைபிடிப்பர்.

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்.**

**மகரம்**



மனதில் தைரியம் அதிகரிக்கும். திட்டமிட்ட பணி நிறைவேறும். இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். அவர்களால் மருத்துவச் செலவு ஏற்படலாம். குடும்பத்துடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். மனைவி உங்கள் கருத்துக்கு முக்கியத்துவம் தருவார். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்.**

**கும்பம்**



நிதானமுடன் செயல்படுவீர்கள். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். நிர்வாகச் செலவு அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்தித்தாலும் வருமானம் கிடைக்கப் பெறுவர். பெண்கள் குடும்பநலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் நல்ல தேர்ச்சி பெறுவர்.

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**மீனம்**



புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். அன்புக்கு உரியவரின் ஆலோசனை கிடைக்கப் பெறுவீர்கள். வாகனப் பயன்பாடு சிறப்பாக அமையும். பிள்ளைகளின் எண்ணங்களை உணர்ந்து இதமாக வழிநடத்தவும். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பால் வளர்ச்சி காண்பர். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள், உறவினர் பிரச்னையில் கருத்து சொல்ல வேண்டாம். மாணவர்கள் நன்றாக படிப்பர்.

# சுதந்திர வேட்கை

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு

**122**

அடேல் பாலசிங்கம்



**வ**யிற்றில் பல காயங்கள். கிழிந்து போன குடலில் இருந்து எறிகுண்டுச் சிராய்கள் நீக்கப்பட்டு கிழியல்கள் பல தைக்கப்பட்டன. காயம் பட்ட ஒருவருடைய கால் குருதி நாளத்திலிருந்து சீறும் இரத்தத்தை அவருடைய உறவினர் ஒருவர் பொத்திப் பிடித்தபடி மருத்துவருக்காக காத்திருந்தார். முப்பது வயது ஆண் நோயாளி ஒருவர் என் பொறுப்பில் இருந்தார். அவருடைய நெஞ்சில் ஒரு துளை. வயிற்றிலும் கிழிந்த காயங்கள். வயிற்றுச் சவ்வு சிதைந்திருக்குமோ என்று மருத்துவர்கள் சந்தேகித்தார்கள். இடைத்தொடைக்குக் கீழே இரத்தம் வந்து கொண்டிருந்தது. கிழிந்த காயங்களுக்கு கீழே கடுங்காயம் இருக்குமோ என்றும் எண்ணத் தோன்றியது. முதலுதவி செய்தவர்கள் தலையைச் சுற்றிக் கட்டியிருந்தார்கள். அதில் இரத்தக் கறை! மண்டையோடு கிழிந்திருந்தது. எனது கால்மீது ஏதோ சிந்திக் கொண்டிருந்தது. ஓடும் நீர் எங்கேயிருந்து வருகிறது என்று ஒரு கணம் யோசித்தேன். கீழே பார்த்த போது, அந்தக் காயக்காரரின் மண்டையோடு ஆழமாகப் பிழந்திருப்பதைக் கண்டோம். அவரை எவராலும் காப்பாற்ற முடியாது என்பது உறுதியாயிற்று. யன்னலூடாக வெளியிலிருந்து ஆற்றாமையோடு பார்த்துக்கொண்டிருந்த அவருடைய உறவினர்கள் அவர் இறந்ததும் கதறி அழுதார்கள். அடுத்த ஒரு அறையில் சில முஸ்லிம்கள். சிதறிக் கிடந்த ஒரு உடலத்துக்கு அருகே குவிந்து நின்றார்கள். சிதறிப் போன பாகங்களை மருத்துவர்கள் ஒன்றாகப் பொருத்தி புதுமை செய்ய மாட்டார்களோ என்ற தவிப்பு அவர்களுக்கு! அன்று மரணம் தான் வெற்றி பெற்றது. ஒருவருடைய சிதைந்து போன முண்டத்தைக் கூட அவருடைய உறவினர்கள் கொண்டு வந்திருந்தார்கள். துண்டிக்கப்பட்ட மனித உடல் உறுப்புக்கள் கழிவுக் கூடையில் நிரம்பி வழிந்தன: சிந்திய இரத்தம் தரையில் பசையாக உறைந்து கொண்டிருந்தது. பயங்கரமும் அவலமுமு நிறைந்த சூழலே அங்கு நிலவியது. அன்று மட்டும் இந்திய அமைதிப் படையால் சாவகச்சேரியில் முப்பது தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். எழுபத்தியைந்து பேருக்கு பெரிதும் சிறியதுமாக காயம்.

பலமணிநேரம் பெரிதும் கழிய காயத்தோடு வந்த பலரோடு அல்லாடி முடிய, உடைந்த உடலங்களையும் பழுதுபார்த்துச் செப்பனிட்டு முடிய, காயக்காரர் படுக்கைப்பிரிவுக்கு உயிரோடு போரட அனுப்பி வைக்கப்பட்டு முடிய அறுவைச்சிகிச்சைக் கூடத்தை துப்பரவாக்கும் பணியே மீதமாக இருந்தது. அசுர பணி நடந்த அறையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். வழுவழுப்பான வெள்ளத்தரையில் வளைந்து நெளிந்து செல்லும் சிவப்பு இரத்த சிற்றோடைகள் , குப்பைச்சாக்குகள் மனித உடலுறுப்புக்களால் நிரம்பியிருந்தன. அவற்றில் இருந்து, கையும், காலும் நீட்டிக்கொண்டிருந்தது. பார்ப்பவர்களுக்கு முதுகெலும்பின் ஊடாக ஒரு நடுக்கம் ஏற்படும் நிலை.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருடனுக்குச் சொன்ன அறிவுரை

குருநானக் ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு உபதேசம் செய்து வந்தார். ஒரு நாள் அவர் கிராமம் ஒன்றில் உபதேசம் செய்து கொண்டிருக்கையில், கூட்டத்தில் இருந்த ஒருவன் எழுந்து நின்று, அவர் முன் வந்து அவர் பாதங்களில் விழுந்து அழத் தொடங்கினான். குருநானக் அவனைத் தூக்கி நிறுத்தி, யாரப்பா நீ? எதற்காக இப்படி அழுகிறாய்? என்று கேட்டார்.

உடனே அவன் என் பெயர் பீகம் என்றான்.

இந்தப் பெயரைக் கேட்டதும், அங்கிருந்த அனைவரும் பயந்து எழுந்து நின்றனர். ஏனெனில், அந்தப் பகுதியில் மிகப் பெரிய திருடனாக இருந்தவன் பெயர் பீகம். இவன் அந்தத் திருடனாக இருப்பானோ என்று எண்ணினர்.

குருநானக் அவனிடம், "நீ ஏன் அழுகிறாய்?நான் பிறரிடம் கொள்ளையடித்துத் தான் என் வாழ்க்கையை நடத்துகிறேன். அதனால் தான் வருத்தப்படுகிறேன்" என்றான்.

"சரி. இன்று முதல் நீ திருடுவது, கொள்ளையடிப்பது போன்றவைகளை விட்டுவிடு" என்றார் குருநானக்.

"அது என்னால் முடியாத செயல். என் வருத்தத்தைப் போக்க வேறு வழி எதாவது சொல்லுங்கள்" என்றான் அவன்.

குருநானக் சிறிது நேரம் யோசித்தார். பிறகு முகமலர்ச்சியுடன் அவனைப் பார்த்து, "நான் சொன்னால், நீ செய்வாயா?" என்று கேட்டார்.

"திருடாதே, கொள்ளையடிக்காதே என்று சொல்வதைத் தவிர வேறு என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். நான் உங்கள் சொல்லை அப்படியே ஏற்று செயல்படுவேன்" என்றான் அவன்.

"நான் சொல்லப் போவது மிகவும் எளிமையான செயல். நீ தினமும் மாலை, அன்று முழுவதும் என்ன செய்தாய் என்று எழுதி வைத்து, அதை அடுத்த நாள் இந்தக் கூட்டத்தில் படிக்க வேண்டும். இப்படிச் செய்தால் உன் மனதிலுள்ள வருத்தம் மறைந்துவிடும்" என்றார்.

"இவ்வளவுதானா? நான் கூட நீங்கள் ஏதோ கடுமையான செயலைச் செய்யச் சொல்லப்போகிறீர்கள்" என்று நினைத்தேன் என்றான்.

"நீ வழக்கம் போல் திருடுவதோ, கொள்ளையடிப்பதோ எதை வேண்டுமானாலும் செய். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், அதையெல்லாம் எழுதி வைத்துக் கொண்டு இங்கு வந்து வாசித்து விட்டுப் போனால் போதுமானது" என்றார்.

"அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனான் அவன்.

அங்கிருந்தவர்கள், குருநானக் திருடனைத் திருடாதே என்று சொல்வதை விட்டுவிட்டு திருடு என்று சொன்னதுமில்லாமல், அதை எழுதிக் கொண்டு வந்து இக்கூட்டத்தில் வாசிக்க வேறு சொல்லிவிட்டாரே... இவரைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை என்று நினைத்தனர்.

அடுத்த நாள் அந்தத் திருடன் வரவில்லை. தொடர்ந்து சில நாள்களாக அவனைக் காணவில்லை.

ஒருநாள் அவன் அந்தக் கூட்டத்துக்;கு வந்தான். குருநானக் காலில் விழுந்த அவன், "சுவாமி, நான் என் திருட்டுத் தொழிலை விட்டு விட்டேன். நீங்கள் சொன்னபடி நான் முதலில் திருடிவிட்டு, அந்தத் திருட்டைப் பற்றி எழுதி வைத்துக் கொண்டேன். ஆனால், நான் எழுதி வைத்ததை இந்தக் கூட்டத்தில் வந்து வாசித்துக் காண்பிக்க என் மனம் சம்மதிக்கவில்லை... இப்படியே சில நாள்கள் கடந்து போய் விட்டது. நான் இப்போது என்னுடைய திருட்டையே விட்டுவிட்டேன்" என்றான்.கூட்டத்தினருக்கு குருநானக்கின் முன் யோசனையுடனான அறிவுரை தற்போது தெரிந்தது.

- சித்ரா





இந்த இரு படங்களிலும் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்

## அது என்ன?

1. ராகத்துடன் பாடி வருவார்; ராத்தூக்கம் கெடுப்பார். அவர் யார்?
2. காவி உடை அணியாத முனிவர்:கரை ஓரம் ஒற்றைக்காலில் தவம் செய்கிறார். அவர் யார்?
3. கருப்பு நிறத்துக்குச் சொந்தக்காரன்:கலகல பேச்சுக்காரன்:ஒருவருக்குத் துயர் என்றால் ஊரையே அழைப்பான்.அவன் யார்?
4. பறக்கும் இது பறவை இல்லை. ஆனால் இது அடையாளம் காட்டிக் கொடுத்து விடும். அது என்ன?
5. விழுந்தால் இது படுக்காது, நிமிர்ந்து எழுந்தால் நிற்காது .இது என்ன?
6. தாகம் போக்கும் தண்ணீர் இல்லை. களைப்பைப் போக்கும் மருந்தும் இல்லை. சண்டைக்குச் செல்லும் இது ஆயுதமும் இல்லை. இது என்ன?
7. நீந்தத் தெரியும் மீனில்லை; நடக்கத் தெரியும் மனிதனும் இல்லை; இறக்கை இருந்தும் பறக்காத பறவை நான் யார் தெரியுமா?
8. தொட்டால் மணக்கும்; கடித்தால் புளிக்கும். அறுத்துப் பிழிந்து தண்ணீர், சர்க்கரை சேர்த்து விட்டால் அடடா , சூப்பர் என்பார். யார் இது ?
9. முதுகில் சுமை தூக்கி முனங்காமல் வருவான்.மூச்சும் திணறாது.முகமும் கோணாது. அவன் யார்?
10. ஒன்பது பிள்ளையானாலும் ஒரே குடுமிதான் எங்களுக்கு. நாங்கள் யார்?

### விடைகள்

1. கொசு
2. கொக்கு.
3. காகம்.
4. கொடி.
5. தஞ்சாவூர் பொம்மை.
6. சோடா.
7. வாத்து
8. எலுமிச்சை.
9. நத்தை.
10. வெள்ளைப்பூண்டு.வான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருசுவில் தமிழ்தாசன்



# குடும்ப வாழ்க்கை



ஏதோ ஒரு மனவைராக்கியத்தினால் உந்தப்பட்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டேன். இனிமேல் எனது வீட்டு முற்றம் மிதிப்பதுமில்லை. மனைவியின் முகத்தில் விழிப்பதுமில்லை. திடசங்கற்பம் பூண்டு கொண்டேன். சொன்னாற் சொன்னது தான்.

மனைவிக்கும் எனக்கும் தினமும் சண்டை சச்சரவுகள். எத்தனை காலம் தான் அனுசரித்துப் போவது. எப்படித்தான் சமாளிப்பது. கட்டிய மனைவியானவள் ஏறுமாறாக நடப்பாளாயின் கூறாமல் சன்னியாசம் கொள்! என்றும் வார்த்தையை வேதவாக்காகக் ஏற்றுக் கொண்டு எப்படியோ வீட்டை விட்டுக் கிளம்பியாயிற்று.

நாற்பது வயதானால் வீட்டுக்கு நாய் தேவையில்லை என்பதும் உண்மையான ஒரு ஊர்ப்பழமொழி. எனக்கு நாற்பத்தைந்து. மனைவிக்கு நாற்பது. புத்திரபாக்கியம் கிடைக்காது. நானும் அவளும் தான் வீட்டிலே! சமைப்பது. சாப்பிடுவது. உறங்குவது. இவைகளை விட்டால் மிகுதி நேரங்களில் நாய்கடி ,புனைக்கடி சண்டைகள் தான். என்னால் இனியும் தாக்குப் பிடிக்க முடியாது.

மனைவியை விட்டு நான் பிரிந்து போவதினால் அவளுக்கு அப்படியொரு பெரிய இழப்புக்களும் ஏற்படப் போவதில்லை. தாய்வீடு அரவணைத்துக் கொள்ளும். ஆனால் என்பாடு தான்..! உரைத்துப் பார்க்கக் கூட ஒரு சல்லிக்காசு கிடைக்காது. வெறுங்கையுடன் ஒரு பையுடன் ஏதோ ஒரு வேகத்தில் வந்துவிட்டேன். ரோஷமும், கோபமும் ஒன்றுடன் ஒன்று ஒன்றிணைந்து கொள்ள வீட்டிலிருந்து ஒரு பொருளையோ பணத்தையோ எடுத்து வர மனம் இடம்கொடுக்கவில்லை. எதிர்வரும் நாள்கள் எப்படி நகரப்போகின்றதோ அந்த ஈஸ்வரனுக்குத் தான் வெளிச்சம். வயிற்றுப்பாட்டுக்கு என்ன செய்வது! பாதுகாப்பாகப் படுத்துறங்க என்ன வழி! கேள்விகள் ஒன்றன்பின் ஒன்றாக வெளிக்கிளம்பி என்னைக் குடைந்தெடுக்கத் தொடங்கின.

அது ஒரு அயலூர். அங்கே ஒரு அழகான அம்மன் கோயில். தெற்குப் புறத்தே ஒரு மடம் வெறுமையாகக் காட்சி கொடுத்தது. மெல்ல அதற்குள் நுழைந்து கொண்டேன். இரவுப் பொழுதைக் கழிக்க வேண்டுமே. கையில் கிடந்த துணிப் பையை எடுத்து அதற்குள்ளிருந்த துணிமணிகளை நிலத்தில் விரித்துப் படுத்து விட்டேன். எதற்கும் விடியட்டும் பார்ப்போம் என்று ஒரு அசட்டுத் தைரியம்.

"டேய் ஆரடா நீ! என்ன களவுக்கு வந்திருக்கிறியோ! எழும்படா!"

கையில் பொல்லுடன் இரண்டு நடுத்தர வயது மதிக்கத்தக்க மனிதர்கள் என்னைப் பயமுறுத்திக் கொண்டு நின்றனர். என்னுடைய பிரச்சினைகள் அனைத்தும் ஒன்றும் விடாது சொல்லி முடித்து விட்டேன் அவர்களுக்கு.

"கட்டின பெண்சாதியோடை கோபிச்சுக் கொண்டு வந்து இப்படிப் பேயாய் அலைய உனக்கு வெக்கமில்லையே! இந்த வயதிலை இப்படி நடக்கிறது சரியே!"

இருவரும் புத்திமதி சொன்னார்கள். எனது மரமண்டையில் அவைகளொன்றும் ஏறவில்லை. இந்த மடமில்லாவிட்டால் சந்தை மடம். மனம் சொல்லிக்கொள்ள அடுத்த கிராமத்தை நோக்கிக் கால்கள் நடக்கத் தொடங்கின. நேற்றைய இரவும் பட்டினி. இப்போதும் மதியமாகி உச்சி வெயில் மண்டையைப் பிளக்க மயக்கமாக இருந்தது. எல்லாம் பசியின் கொடூரம் தான்.

நல்லவேளை! அந்த ஊரின் எல்லைப் புறத்துப் பிள்ளையார் கோயிலில் அன்று திருவிழா ஆரம்பமாகின்றதாம். யாரோ பேசிக்கொண்டது எனது செவிகளில் துல்லியமாக விழுந்து கொண்டன. பத்துத் தினங்களும் அங்கே அன்னதானம் கொடுப்பார்களாம். பிள்ளையார் என்னைக் கைவிடவில்லை. படைத்தவன் படியளப்பான் என்னும் வார்த்தையில் எத்தனை உண்மை பொதிந்திருக்கின்றது என்பதை உணர்ந்து கொண்ட எனக்கு நெஞ்சமெல்லாம் குளிர்ந்தது. பத்து நாள் அன்னதானத் தைத் தொடர்ந்து பக்கத்து வாசிகசாலையில் மெல்லப்படுத்துறங்கிக் காலத் தை ஓட்டத் தொடங்கினேன். யாருடைய தொந்தரவுகளுமில்லை. எங்கேயாவது கோயில் அன்னதானம், திருமணம், பூப்புனிதம், பிறந்தநாள் தினமென்று கொண்டாட் டங்கள் அடிக்கடி வந்து கொண்டேயிருந்தன. இதனால் என்பாடும் கொண்டாட்டமாகவே இருந்தது.

அடுத்தவனின் ஊரில் அறிமுகமற்றவர்களின் ஊரில் திருமணத்துக்கோ கொண்டாட்டங்களுக்கோ யார் என்னை அழைக்கப்போகின்றார்கள்! எல்லாமே அழைக்கப்படாத விருந்துகளாகவே இருந்தன. திருமண வீட்டில் பெண் வீட்டார் என்னை மாப்பிள்ளையின் குடும்பத் தைச் சார்ந்தவன் என நினைத்துக் கொள்வார் கள். இதே போல பெண் வீட்டுக்காரராக இருக் குமென மாப்பிள்ளை வீட்டார் கருதிக் கொள்வதன் காரணமாக எதுவித தயக்கமுமின்றி எல்லா விருந்துகளிலும் பங்கு பற்றி எனது வயிற்றுப் பசியைத் வெற்றி கரமாக விரட்டியடித்துக் கொண்டிருந்தேன். தினமும் பத்திரிகைகள் பார்த்துக் கொள்வேன். காசு கொடுத்து வாங்க முடிவதில் லை. நூல்நிலையங்களில் பத்திரிகைகளைப் படிப்பதுடன் நின்றுவிடாது அவ்வப்போது வெளிவரும் அந்தியேட்டி அழைப்புக் களையும் கவனத்திலெடுத்துக் கொள்வேன். எனவே என்னுடைய வயிற்றுப்பாடு எதுவித சிக்கல்களுமில்லாது ஓடிக் கொண்டிருந்தது. பல நூற்றுக்கணக்கான விருந்தாளிகளுக்கு மத்தியில் நானும் ஒரு அழைக்கப்படாத சிறப்பு விருந்தாளியாக கலந்து கொள்வதில் ஆபத்துக்களெதுவும் இருக்கவில்லை. சில அழைப்புக்களில் இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும் படி கேட்டிருப்பர். அப்படியான அழைப்புக்கள் பயம் கலக்க மில்லாதவைகளாக அமைந்து விடுவதுண்டு. ராஜ உபசாரம். குளிர்பான வகைகள் , கேக், பூந்திலட்டு மற்றும் வாய்க்கு ருசியான வகைவகையான சிற்றுண்டி கள், கமகம'வாசனையில் மரக்கறிப்பிரியாணி உண்மையில் இவைகளை அனுபவிக்க கொடுத்து வைத்திருக்க வேண்டும். நான் கொடுத்து வைத்திருக்கிறேன். அனுபவிக்கிறேன். அங்கே என் மனைவி யானவள் என்ன நிலைமையிலிருக்கிறாளோ! கையில் மடியில் காசிருக்கும் வரை தாய் வீடு அணைத்துக் கொள்ளும். அதுவும் தீர்ந்து விட்டால் அவளின் நிலைமையயும் அரோகரா தான்.

எனது மனைவி மனோகரி நல்லவள் தான். இந்த இருபத்தைந்து வருடத் தாம்பத்திய வாழ்க்கையில் எனக்கு எந்த விதமான கஷ்டங்களையும் தர வில்லை. அதே போன்று ஒரு பிள்ளை குட்டி யையும் பெற்றுத் தரவில்லை. அதற்கு யார் பொறுப்பாளியோ என்று இன்று வரை ஆராய்ச்சி பண்ணியும் முடிவு புரியவில்லை. மனோகரி நல்லவளாயிருந்தும் அடிக்கடி கோபமும் எரிச்சலும் உண்டாவதை மாற்ற முடியவில்லை. அதை என்னவென்று சொல்வது! நாற்பதுக்கு மேற்பட்ட நாய்க்குணம். அவ்வாறானால் அவளுக்கும் நாற்பது வயதுக்குரிய நாய்க்குணமிருப்பதால் என்ன தவறு! அடிக்கடி இப்படியும் மனச்சாட்சி சொல்லிக் கொள்ளத் தவற வில் லை. இருந்தும் இனி எதுவும் செய்ய முடியாதளவுக்கு அவளிடம் சண்டை போட்டு வந்து விட்டேன்.

அன்றொரு நாள் அந்த ஊரெங்கும் அலைந்து திரிந்தேன். எங்குமே ஒருவித கொண்டாட்டங்களுமில்லை என்றபடியால் என்னுடைய வயிற்றுப்பாடு திண்டாட்டமாகவே இருந்தது. அலைந்து திரிந்து கொண்டிருந்த வேளையில் தான் அந்த மண்டபத்தில் ஏராளமானவர்கள் கூடி நின்றர்.ஒலிபெருக்கி பாடிக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு கொண்டாட்டமென்பது மட்டும் புரிந்து விடத் திறந்த வீட்டு நாயாக உள்ளே நுழைந்தேன். இப்போது எல்லாமே பழகிவிட்டதால் பயம் உண்டாவதில்லை.

எல்லோரும் சாப்பாட்டுப் பந்திக்குப் போனார்கள். எனக்கும் அகோரப்பசி. உள்ளே நுழைந்து தட்டிலே சோற்றைப் போட்டு அத்தனை கறிவகைகள் அனைத்தையும் சேர்த்து ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தேன்.

"அண்ணை! உங்களை ஆரெண்டு தெரியவில்லை!"

யாரோ ஒரு குறுந்தாடிக்காரன் என்னை நோண்டத் தொடங்கினான். போச்சடா ! ஆரடா இவன்! சிவபூசைக்கரடியாக வந்து உயிரை வாங்கிறான்! தொண்டைக்குள்ளிருந்த சோறு புரைக்கேறியது. தண்ணீர் பருகியும் சரிவரவில்லை.

"ஆர்...ஆ....ர்! நானோ! நான் மாப்பிள்ளை பகுதி! மாப்பிள்ளைக்கு மாமா!"

சொல்லிவிட்டுச் சோற்றை அள்ளி வாயில் போடுவதிலேயே கவனமாயி ருந் தேன்.

"இஞ்சை ஆரப்பா மாப்பிள்ளை! இது என்ன கலியாண வீடே! இது சாமர்த்திய வீடெல்லோ!"

சற்றுக்குரலை உயர்த்தி என்னை நையாண்டி பண்ணிப் பார்த்தான்.

"டேய்! உவன் கள்ளன் போலைக் கிடக்கு. பிடிச்சுக்கட்டுங்கோடா! மண்டபங்களிலை இப்ப சங்கிலி, தாலிக்கொடியெல்லாம் களவு போகுது. உவனும் சங்கிலியறுக்கத்தான் வந்திருக்கிறான். ஆளைக்காட்டுங்கோ! நல்ல சாத்து கொடுப்பம்!"

மற்றுமொருவன் எனது முகத்தில் ஒரு குத்து விட்டான். முகமெல்லாம் சிவப்புச் சமாச்சாரம் வழிந்து கொண்டிருந்தது. வலியொருபுறம். எனது நிலைமையை ஆதியோடந்தமாக விபரித்தேன். வேறு வழி...!

"குடும்பத்திலை சண்டை சச்சரவில் லாமல் ஆர் இருக்கினம்! குடும்பமெண்டால் பிரச்சினைகளிருக்கத்தான் செய்யும். அதுக்காக தாலி கட்டின பெண்சாதியை விட்டிட்டு ஒதுங்கி வாழுறது சரியே! நீயெல்லாம் ஒரு ஆம்பிளையோ! அவளைத் தவிக்க விட்டிட்டு நீ இஞ்சை ஒரு நேரச் சோத்துக்குப் பிச்சைக்காரன் மாதிரி அலையுறியே! இதை விட உன்ரை பெண்சாதியோடை செல்லமாய் சண்டை போட்டுக் கொண்டு குடும்பமாய் வாழுறதிலை எவ்வளவு சந்தோஷமி ருக்குது. சின்னப்பிரச்சினையளைப் பெரிசாக்கினால் குடும்பத்திலை சந்தோஷமாய் வாழ ஏலாது. என்ன இருந்தாலும் புருஷன் பெண்சாதி சேர்ந்து வாழுற சந்தோஷம் வேறை என்னத்திலை இருக் கு!"

அவர்கள் சொல்லச் சொல்ல என் கால்கள் மனைவியை நோக்கி நடக்கத் தொடங்குகின்றன. குடும்ப வாழ்க்கை வாழ்வதற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலையுதிர் காலமான.....

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமனத் தாக்குதல்கள் வழிகாட்டி ஏவுகணைத் தாக்குதல்களைத் தொடுத்து அவரை ஆட்சியில் இருந்து அகற்றிக் கொல்ல வழி வகுத்தன. தேர்தலுக்காக கடாஃபியிடம் இருந்து பணம் பெற்ற அரசியல்வாதிகளின் இரகசியங்கள் அவருடன் அழிக்கப்பட்டன. லிபியா இப்போது ஒரு தேறாத தோல்வியடைந்த நாடாக இருக்கின்றது. இரண்டு அரசுகள் இப்போது அங்கு ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டிருக்கின்றன. பல போர்ப் பிரபுக்கள் மத்தியில் லிபிய மக்கள் சிக்குண்டு கொண்டிருக்கின்றனர். ஆபிரிக்காவின் செல்வந்த நாடுகளில் ஒன்றான லிபியாவில் உலகின் தலை சிறந்த சமூக நலக் கொடுப்பனவுகள் கடாஃபியின் ஆட்சியால் செய்யப்பட்டன. அறுபது இலட்சம் மக்களும் நன்கு வாழக்கூடிய எண்ணெய் வளம் அங்கு இருக்கின்றது. ஆனால் 2015-ம் ஆண்டு டிசம்பரில் லிபியாவின் அரசியல்வாதி ஒருவர் அடுத்த சோமாலியாவாக லிபியா மாறப்போகின்றது என எச்சரித்தார்.

சிரியாவின் அரபு வசந்த எழுச்சி முதலில் சியா மற்றும் சுனி முஸ்லிம்களுக்கு இடையிலான போட்டியாக மாறியது. பின்னர் ஈரானுக்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையிலான போட்டிக்களமானது. தற்போது உலக வல்லரசுகளின் போட்டிக் களமாகியுள்ளது. சிரிய நகரங்களின் அரைவாசி தரைமட்டமாகிவிட்டது. தற்போது பிரச்சனை பஷார் அல் அசாத்தின் அடக்குமுறை மிக்க ஆட்சியை அகற்றுவதல்ல. இஸ்லாமியத் தீவிரவாதத்தை எப்படி ஒழிப்பது என்பதே! மற்ற எல்லா நாடுகளையும் விட மோசமான உயிரிழப்பு சிரியாவிலேயே ஏற்பட்டது. மூன்று இலட்சத்திற்கு மேலான அப்பாவிகள் கொல்லப்பட்டனர். 65இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இடப்பெயர்வுக்கு உள்ளாகியுள்ளனர்.

அரபு வசந்தத்தின் பின்னர் ஈராக் மூன்றாகப் பிளவு பட்டுள்ளது. சியா முஸ்லிம்களின் ஆட்சி, குரிதிஷ் மக்களின் ஆட்சி, ஐ எஸ் அமைப்பினரின் ஆட்சி என மூன்று ஆட்சிகள் அங்கு நிலவுகின்றன. அதன் பொருளாதாரம் மோசமாகின்றது. ஈராக்கில் யதீஷியர்கள் இனக்கொலைக்கு உள்ளானார்கள்.

சவுதி அரேபியாவிலும் பாஹ்ரேனிலும் உருவான மக்கள் எழுச்சியையும் அதை சவுதி அரேபியப் படைகள் மூர்க்கத்தனமாக அடக்கியதைப் பற்றியும் மேற்கு நாட்டுப் பத்திரிகைகள் பெரிது படுத்தவில்லை. அமெரிக்காவின் படைத்தளமுள்ள பாஹ்ரேனில் ஈரானிய ஆதரவுக் கிளர்ச்சிக்காரர்கள் பெரும் போராட்டம் செய்தனர். நிலைமை மோசமானவுடன் சவுதி அரேபியா தனது படைகளை அங்கு அனுப்பி கிளர்ச்சிக்காரர்களை அடக்கியது. பஹ்ரேனில் அரபு வசந்தத்தின் பின்னர் மோசமான அடக்கு முறை நிலவுகின்றது.

அரபு நாடுகளில் ஒரு நல்ல ஆட்சி முறைமை இருந்ததில்லை. அவ்வப்போது வந்த ஒரு சில ஆட்சியாளர்களைத் தவிர மற்ற எல்லா ஆட்சியாளர்களும் ஊழல் மிக்கதும் திறனற்றதுமான ஆட்சியையே செய்தனர். துனிசியாவைத் தவிர எல்லா நாடுகளிலும் அரபு வசந்தத்திற்கு முன்னர் இருந்ததிலும் பார்க்க மோசமான ஆட்சி, மோசமான அடக்கு முறை, மோசமான மனித உரிமை மீறல்கள், மோசமான பொருளாதாரச் சூழல் ஆகியவை நிலவுகின்றன. இவற்றில் மாற்றம் ஏற்படக் கூடிய நிலைமை அண்மையில் இல்லை. அரபு வசந்தம் துயரைத் தவிர வேறு எதையும் கொண்டு வரவில்லை.

# ஓர் இளம்பெண்ணின்.....

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரியவில்லை.

வயிற்றில் அவருடைய குழந்தையையும் மனதில் அவர் நினைவுகளையும் சுமந்தவாறு அவரின் அழைப்புகளுக்காக ஒவ்வொரு நிமிடமும் காத்திருந்தேன். எனினும், ஏமாற்றங்களுடனே என்னுடைய ஒவ்வொரு பொழுதும் கழிந்துசென்றது.

இந்நிலையில், என் பிரசவ நாளும் நெருங்கியது. நான் அழகிய ஆண் குழந்தையொன்றைப் பெற்றெடுத்தேன். ஆயினும், அந்த சந்தோஷத்தை என் கணவருடன் பகிர்ந்துகொள்ள அவர் என் அருகில் இருக்கவில்லை.

பல நாள் தொடர்பில்லாமல் இருக்கும் அவரிடம் குழந்தை பிறந்துவிட்டதையாவது தெரியப்படுத்த பலவாறு முயற்சித்தேன்.

எனினும், எதுவுமே எனக்கு சாத்தியப்படவில்லை. குழந்தையும் பிறந்தவுடன் குடும்பத்தின் செலவுகள் அதிகரித்தன. இதனால் எனக்கு பணம் தேவைப்பட்டது. ஆகவே, என் குழந்தையை மாமியிடம் விட்டு, வீட்டுவேலைகளுக்குச் சென்றுவந்தேன்.

இது இவ்வாறிருக்க, எனது குழந்தைக்கு ஏழு மாதமிருக்கும். ஒரு நாள் வெளிநாட்டு தொலைபேசி இலக்கமொன்றிலிருந்து அழைப்பொன்று வந்தது.

நான் என் கணவர் தான் அழைப்பை ஏற்படுத்துகின்றார் என்ற பூரிப்பில் அழைப்புக்கு பதிலளித்தேன். எனினும், மறுமுனையில் என் கணவரின் நண்பர் ஒருவரே கதைத்தார்.

அவர் என்னிடம் உன் கணவர் இறந்துவிட்டார் என்று கூறியதுடன் அவர் எச்..வி தொற்றினால் பீடிக்கப்பட்டிருந்திருந்ததாகவும் அதனால் அவருடைய உடலை இலங்கைக்கு அனுப்ப முடியாது என்று சீல் வைத்து அங்கேயே அடக்கம் செய்துவிட்டதாகவும் கூறினார். எனக்கு அதற்கு பிறகு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

திருமணமே செய்துகொள்ளாது வாழ்ந்த எனக்கு ஏன் இறைவன் இப்படியொரு வாழ்க்கையை தந்தான் என்று கதறி அழுதேன்.

பதிலுக்கு என் மாமியும் என்னை ராசி இல்லாதவள் என்றெல்லாம் திட்டி வார்த்தைகளால் என் மனதை புண்படுத்தினார். அதன்பின்னும் என் சோகம் தீர்ந்தபாடில்லை.

கணவர் இறந்துவிட்டார் என்ற செய்தி அறிந்தவுடன், இனி குழந்தைக்காகவாவது வாழ வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். வீடு வீடாகச் சென்று வேலை செய்து பணம் சம்பாதித்தேன்.

எனினும் அடிக்கடி எனக்கு ஏற்பட்ட சுகவீனம் காரணமாக என்னால் வீட்டு வேலைகளுக்கு ஒழுங்காக செல்ல முடியவில்லை.

இந்நிலையில் எங்கள் ஊருக்கு அடிக்கடி வந்து சென்ற குருணாகலிலுள்ள முகவர் நிலையமொன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் தரகர் ஒருவரின் மூலம் எனக்கு மத்தியகிழக்கு நாடொன்றுக்கு தொழிலுக்காக செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது.

எனவே குழந்தையை மாமியிடம் விட்டு விட்டு இரண்டு வருடங்களுக்கு வெளிநாடு சென்று வருவோம் என்ற முடிவில் அதற்கான ஆயத்தங்களை செய்தேன்.

இறுதியாக மருந்து பரிசோதனை செய்துவிட்டு அதன் அறிக்கை வரும் வரை ஒரு வாரம் காத்திருந்தேன்.

அதன்பின் வார இறுதியில் அந்த முகவர் நிலையத்திலிருந்து எனக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்தது. ரிஹானா, நீங்கள் உடனடியாக இங்கே வாருங்கள் என்று.அவர்கள் கூறினார்கள்.

எனவே வெளிநாட்டுக்கு செல்வது சரிவந்துவிட்டது என்ற நம்பிக்கையில் அங்கு சென்றேன். ஆயினும், அவர்கள் ரிஹானா, உங்களை வெளிநாட்டுக்கு அனுப்பமுடியாது நீங்கள் (H.I.V) எச்.ஐ.வி தொற்றுக்குட்பட்டிருக்கின்றீர்கள்.

நீங்கள் உடனடியாக கண்டியிலுள்ள தொற்று நோய் தடுப்பு பிரிவுக்கு சென்று பரிசோதனைகளை மேற்கொண்டு சிகிச்சைபெற வேண்டும், என்று கூறினார்கள்.

என் தலையில் இடியே வீழ்ந்தது போல இருந்தது. நான் உடனடியாக தொற்று நோய் தடுப்பு பிரிவுக்குச் சென்று சிகிச்சைபெற ஆரம்பித்தேன். அங்கு என் குடும்ப விபரங்கள் தொடர்பாக கேட்டார்கள்.

இதன்போது தான் எனது கணவருக்கு இருந்த எச்.ஐ.வி தொற்றுக்காரணமாக எனக்கும் இந்த தொற்று ஏற்பட்டுள்ளது. என்பதை நான் அறிந்துகொண்டேன்.

அதுமட்டுமின்றி, என்னுடைய கணவர் தலைவலிக்கு குடிக்கும் பெனடோல் என்று கூறியது எச்.ஐ.வி நோய் தொற்றுக்கு உபயோகிக்கும் மருந்துவகைகள் என்பதையும் என் கணவர் உண்மையை மறைத்தே என்னை திருமணம் செய்திருப்பதும் எனக்கு புரிந்தது. அதற்கு பிறகு என்ன செய்வது எல்லாம் என் கை மீறி போனது.

நான் எச்.ஐ.வி தொற்றுக்குட்பட்டவள் என்று வெளியில் கூறினால் என்னை எல்லோரும் வெறுத்து விடுவார்களோ என்ற பயத்தில் என் உறவுகள் யாரிடமும் இது தொடர்பாக கூறி ஆறுதல் பெற நினைக்கவில்லை.

நெருங்கிய நண்பர் ஒருவரின் உதவியுடன் கண்டியில் வீடு ஒன்றை வாடகைக்கு பெற்றுக்கொண்டு வந்து மகனுடன் குடியேறினேன்.

அங்கு ஹோட்டலொன்றில் தொழில் செய்து பணம் சம்பாதித்தேன். எனனுடைய ஒவ்வொரு வேலைகளையும் நான் தனியாகவே பார்த்துக்கொண்டேன்.

அங்கு கணவர் இல்லாது கைகுழந்தையுடன் இருந்த என்னை நோக்கிய சமூகத்தவர்களில் பார்வை வித்தியாசமாகவிருந்தது. பலரும் பலவாறு கதைத்தார்கள் எனினும் நான் அவை எதையும் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

இந்நிலையில் என்னுடைய மகனுக்கும் இந்த தொற்று ஏற்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் எனக்குள் எழுந்தது. எனவே இது தொடர்பாக வைத்திய அதிகாரிகளிடம் கேட்ட போது மகனுக்கு ஒன்றரை வயது வரும் வரை எச்.ஐ.வி தொற்றுக்குட்பட்டிருக்கின்றாரா? என்பதை கண்டுபிடிக்க முடியாது என்று கூறினார்கள்.

எனவே நான் மகனுக்கு ஒன்றரை வயது ஆகும் வரை காத்திருந்தேன். அதுமட்டுமின்றி, மகனுக்கு தாய்ப்பால் வழங்குவதையும் நான் நிறுத்திவிட்டேன்.

இதுஇவ்வாறு இருக்கையில், மகனுக்கு ஒன்றரை வயது ஆனது. நான் மகனை பரிசோதனைகளுக்காக கொழும்பு அழைத்துச்சென்றேன்.

காலை 8.30 மணியவில் கொழும்பு தொற்றுநோய் வைத்தியசாலையில் இருக்கவேண்டும் என்பதால் நான் கண்டியிலிருந்து நள்ளிரவு வேளையில் புறப்பட்டு வந்தேன்.

இதன்போது என் நடத்தையில் சந்தேகம் கொண்ட ஒரு சிலர் நான் இரவு வேளைகளில் பல ஆண்களை சந்தோஷப்படுத்தி பணம் சம்பாதித்து வருவதாக பொலிஸாருக்கு போலி தகவலொன்றை வழங்கியிருந்தார்கள்.

இதனால் நான் கொழும்புக்கு சென்று வரும் வழியில் விபசாரத்தில் ஈடுபடுவதாக சந்தேகத்தின்பேரில் பொலிஸார் என்னை கைதுசெய்தார்கள்.

அந்த நிலையில் எனக்கு உதவிக்கு என்று யாரும் இருக்கவில்லை. நான் இரண்டு நாள் என் மகனுடன் விளக்கமறியலில் வைக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டேன்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது நான் என்னுடைய வைத்திய அறிக்கைகளை சமர்ப்பித்து என்னுடைய வாழ்க்கையில் நடந்த அனைத்து சம்பவங்களையும் நீதிபதியிடம் கூறினேன். அதன்பின்னரே நான் விடுவிக்கப்பட்டேன்.

இன்று என்னுடைய மகனுக்கு 8 வயதாகின்றது. கண்டியிலுள்ள சர்வதேச பாடசாலையொன்றில் கல்வி கற்கின்றான். வைத்திய பரிசோதனைகளின்படி எனக்கு எச்.ஐ.வி தொற்று இருக்கின்றது என்பதை அறியாது மகனுக்கு தாய்ப்பால் வழங்கியுள்ளமையால் மகனுக்கும் எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டுள்ளது என்று வைத்தியர்கள் கூறுகின்றார்கள்.

இந்த நிலையில் நானும் மகனும் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியிருப்பதால் கண்டி தொற்று நோய் தடுப்பு பிரிவில் சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றோம். என்னுடைய அறியாமையே என்னுடைய வாழ்வை அலங்கோலமாக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பின்வரும் நாடுகளில் எந்த ஒரு நாட்டிற்கு விண்ணப்பிக்கும் நபருக்கு தலா £3,000 மதிப்புள்ள மூன்று கல்வி உதவி தொகைகள் காத்திருக்கிறது**

இங்கிலாந்து || அமெரிக்கா || கனடா || அவுஸ்திரேலியா || நியூசிலாந்து

மேலும் விபரங்களுக்கு www.britishcouncil.lk/events இணையத்தளத்தை அணுகுங்கள்.
29 பிப்ரவரி 2016 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

BRITISH COUNCIL IELTS

IELTS is jointly owned by British Council, IDP: IELTS Australia and Cambridge English Language Assessment.

Godrej | LOCKING SOLUTIONS AND SYSTEMS ALL 5 LEVELS OF SECURITY EST. 1897

## பாதுகாப்புத் தீர்வுகளும் முறைகளும்

**நிலையானது நீடித்துழைப்பது**

1 வருட உத்தரவாதம்




410/- ரூபாவிலிருந்து

கீழ்வரும் அபான்ஸ் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளமுடியும்

யாழ்ப்பாணம் : 021 2220981, சுன்னாகம்: 021 2240440,
நெல்லியடி : 021 2264934, கிளிநொச்சி: 021 2285411,
சாவகச்சேரி : 021 2270005, சங்கானை: 021 2250106,
முள்ளியவளை: 077 1092102 *நிபந்தனைகளுக்கு உட்பட்டது

உங்களுக்கு பெறுமதி வாய்ந்தவற்றை எந்நேரமும் காத்திடும் கொட்ரிஜ் லொக்ஸ்

Abans

# தற்போது சம்பத் வங்கியிடமிருந்து உங்கள் தங்க ஆபரணங்களுக்கு அதிகூடிய அடகுத்தொகை..!

## கெரட் 22 ற்கு 28,000/-*
## கெரட் 24 ற்கு 30,500/-*

மாதாந்தம் 1.5% குறைந்த வட்டி வீதமே அறவிடப்படும்!

சம்பத் நலன்தரும் அடகுச் சேவை

நாடு முழுவதிலுமுள்ள சம்பத் வங்கி கிளைகளில் தவணை முறையில் செலுத்தமுடியும்.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath Bank Fitch Ratings A+(lka) ✆ 0112 30 30 50 www.sampath.lk

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MERRILL J. FERNANDO

# INNOVATION AWARDS

#ECOVATION

creative solutions for people and planet

dilmahconservation.org

**வளர்ச்சிக்கும் மனிதநேய முகாமைத்துவத்திற்கும் நாட்டில் எதிர்நோக்கப்படும் சூழலியல் சவால்களுக்கும் புத்தாக்கமே அச்சாணியாகும**

இலங்கை பல்வகை உயிரின வளங்களை மாத்திரமன்றி வரலாற்று மற்றும் கலாசார மரபுகள், அறிவாற்றல் மற்றும் மதிநுட்பம் ஆகியவற்றையும் கொண்ட தேசமாகும். எமது நாட்டின் நிலைபெறு தன்மையான அபிவிருத்திக்கு, படைப்பாற்றல் அர்ப்பணிப்பும் புத்தாக்கத்திறனும் பெரிதும் துணைசெய்யும். தமது கருத்துப்படிவங்களை அல்லது மூல ஆக்கங்களை விருத்தி செய்வதற்கு வசதியற்ற படைப்பாளிகளுக்கு உதவுவதன் மூலம புதுமையான சிந்தனை கொண்ட சாதாரண இலங்கையரினால் உந்தப்படும் ஓர் இலங்கை வியாபார முயற்சியான Dilmah இன் வெற்றியை தத்தமது துறைகளில் பிரதிபலிக்க அவர்களுக்கு வழிகாட்டுவதே மெரில் ஜே. பெர்னாண்டோ புத்தாக்கத்திறன் விருதின் குறிக்கோளாகும். இந்த விருதுகள், படைப்பாளிகள் தமது கண்டுபிடிப்புக்களைப் பாதுகாத்துப் பணனடையவும் உதவும் அதே வேளையில், இலங்கையின் சூழல், மனிதநேயம் மற்றும் பொதுவான அபிவிருத்தியின் முன்னுரிமைகளுக்கும் பக்கபலமாக அமையும்.

கழிவுப்பொருள் முகாமைத்துவம் | நீர் | உயிரின பல்வகைத் தன்மை | சக்திவளம் | பிளு இகானமி

இலங்கையில் சூழல் மற்றும் மனிதநேய அபிவிருத்திக்கு உதவக்கூடிய புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் முன்மாதிரி வடிவமைப்புக்களுக்கே விருது வழங்கப்படும். மொத்தப் பரிசுத் தொகை ரூ.3.5 மில்லியனாகும்.

உங்கள் எண்ணக்கருவை அல்லது முன்மாதிரியைச் சமர்ப்பிக்க, ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்களத்தில் கிடைக்கும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யுங்கள்.

**www.dilmahconservation.org/eco-innovation-award/**

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி**
**2016, மார்ச் மாதம் 21ம் திகதி**

**வசதியளிக்கும் நடுவர் குழு:**
பேராசிரியர் அஜித் டீ அல்விஸ்
பேராசிரியல் சரத் டபிள்யூ. கொட்டகம
கலாநிதி சுமித் பிலப்பிட்டிய
திருமதி ரானி யசரத்ன

Dilmah CONSERVATION

மேலும் விபரங்களிற்கு
Email: **awards@dilmahconservation.org**
Phone: 077 9614628

MJF Charitable Foundation






இணையம்
யூடியூப்
முகப்புத்தகம்
பாடல்கள் தரவிறக்கம்

என்பவற்றிற்கான
விரைவான இணைப்பு

வட்டி இல்லை ஜொலி அதிகம்

ரூ. 9000 ற்கு
மேற்பட்ட ஸ்மார்ட்போன்கள்

LG | SMARTPHONES — Lenovo. SMART PHONES — Haier | SMARTPHONE






உங்களுக்கு அருகாமையாகவுள்ள எந்தவொரு அபான்ஸ் காட்சியறைக்கேனும் உங்களின் பழைய ஸ்மார்ட்போனினை(அத்தொலைபேசி எத்தகைய மொடல் அல்லது நிலையில் இருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும்) எடுத்துச்சென்று 3G ஸ்மார்ட்போனுக்கான விலையில் புதிய 4G ஸ்மார்ட்போனினை பெற்றுக்கொள்ளுங்கள்.

நாடளாவிய ரீதியிலான அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

Abans



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2016 பெப்ரவரி 03ஆம் திகதி வெளியிடப்பட்டது.